பக்கங்கள்: 20

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை 15.09.2019 கதிர் 314

இனிது ரகசியம் அல்ல!

ஒவ்வொரு நாளும் எனது 'அளப்புகளை'க் கேட்டு வாசகர்களுக்குத் திகட்டியிருக்கும் என்று கருதி இன்று இன்னொரு பிரகிருதியின் அளப்பை உங்களோடு பகிரலாம் என நினைக்கிறேன்.

அவர் வேறு யாருமல்லர், பிரபல சிங்கள நடிகர், பக்கம் 02

# கூட்டமைப்புடன் ரணில் செவ்வாய் முக்கிய பேச்சு!

கொழும்பு, செப். 15

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்கும் முக்கிய சந்திப்பொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஈடுபடவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக, பிரதமர் பக்கம் 03

## நாமலின் திருமணத்தில் முன்னாள் அரசியல் கைதி



கொழும்பு, செப். 15

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப் பக்கம் 03

# ஜனாதிபதி வேட்பாளராக கருவை களமிறக்குங்கள்!

ரணிலிடம் பங்காளித் தலைவர்கள், நாடாளுமன்றக் குழுவினர், மத்திய செயற்குழுவினர், சர்வமதத் தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் புத்திஜீவிகள் கோரிக்கை



கொழும்பு, செப். 15

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக (ஜனாதிபதி வேட்பாளர்) சபாநாயகர் கரு ஜயசூரியவைக் களமிறக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னணியிலுள்ள பங்காளிக் கட்சித் தலைவர்களும், அதேபோல அரசியல் நிலைப்பாட்டில் ஏகோபித்த தீர்மானத்திலிருக்கும் சர்வமதத் தலைவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோர் இது தொடர்பில் பொது இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளனர். பக்கம் 03

## சு.க. எம்.பிக்கள் ஐவரின் கட்சி உறுப்புரிமை நீக்கம்

ஜனாதிபதி மைத்திரி அதிரடி

கொழும்பு, செப். 15

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பொதுஜன பெரமுனவுக்கு சென்றவர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்து, அந்தக் கட்சி அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.

எஸ்.பி. திஸாநாயக்க, டிலான் பெரேரா, பௌசி, லக்ஷ்மன் யாப்பா, விஜித் பக்கம் 03

## அதிரடிப் படையினரின் சூட்டில் அரியாலை இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம், செப். 15

அரியாலைப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் பக்கம் 03

## பலாலி விமான நிலையம் பெயர் மாற்றப்படுகிறதா?

கொழும்பு, செப். 15

புனரமைப்புப் பணிகளின் பின்னர் அடுத்த மாதம் முதல் பிராந்திய விமான சேவைகளை ஆரம்பிக்க பக்கம் 03

## வடமாகாணத்தில் நாளை பாடசாலைகள் இயங்கும்

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் வழமை போல் நாளை திங்கட்கிழமை நடைபெறும் என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் – வடக்கு மாகாணத்தில் உள்ள பக்கம் 03

## கோட்டாவின் பரப்புரைக்காக கோடிகள் கொட்டுகிறதா சீனா?

அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேச்சு

பீஜிங், செப். 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரைகளுக்குச் சீனா பெருமளவில் நிதியை செலவிட்டு வருவதாகக் குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கும் பரப்புரை சீனா பெருமளவு பக்கம் 03

## தவிசாளர் பதவியிலிருந்து தூக்கப்படுகின்றார் கபீர்!

அந்த இடத்திற்கு தயா கமகே



கொழும்பு, செப். 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து தூக்கப்படுகின்றார் அமைச்சர் கபீர் ஹாசிம். அந்த இடத்துக்கு அமைச் பக்கம் 03

## ஒரே மேடையில் ஏறவுள்ள ஜனாதிபதி வேட்பாளர்கள்

கேள்விகளுக்குப் பதிலளிக்க ஏற்பாடு

கொழும்பு, செப். 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ள வேட்பாளர்கள் அனைவரையும், ஒரே மேடையில் கொண்டு வந்து, பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கச் செய்யும் நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

'பவ்ரல்' தலைமையிலான பக்கம் 03




## ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர்; இறுதி முடிவு இன்று தெரியுமாம்

கொழும்பு, செப். 15

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக, இன்று ஞாயிற்றுக்கிழமை முடிவு செய்யப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். பக்கம் 03

# வடக்கு கைத்தொழில் கண்காட்சியை நேரில் சென்று பார்வையிட்ட ஆளுநர்







யாழ்ப்பாணம், செப். 15

வடமாகாண தொழிற்திணைக்களம் ,தேசிய அருங் கலைகள் பேரவை ,புடவைக்கைத்தொழில் திணைக் களம் ஆகியன மத்திய வங்கியுடன் இணைந்து நடாத்தும் மாகாண கைத்தொழில் கண்காட்சிக்கு கௌரவ ஆளு நர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று மாலை விஜயம் செய்தார்.

கைத்தறி மற்றும் கைவினைப்பொருட்களை உற் பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக யாழ் மத்திய கல்லூரியில் இன்று ஆரம்பமான இந்த கைத்தொழில் கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய -இலங்கைக் கடற்படை கூட்டுப் பயிற்சி நிறைவடைந்தது







கொழும்பு, செப். 15

இந்திய – இலங்கைக் கடற்படை களுக்கு இடையில் விசாகப்பட்டினத்தில் நடந்து வந்த சிலினெக்ஸ் 2019 கூட்டுப் பயிற்சி நிறைவடைந்தது.

இந்த இருதரப்பு கூட்டுப் பயிற்சி கடந்த 7ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் உள்ள இந்தியக் கடற்படைத் தளத்தில் ஆரம்ப மானது.

இதில் இலங்கைக் கடற்படையின் சார்பில், சிந்துரால, சுரனிமல ஆகிய போர்க்கப்பல்கள், சுமார் 300 வரை யான கடற்படையினருடன் பங்கேற்றிருந்தன.

2005ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய – இலங்கைக் கடற்படைகள் சிலினெக்ஸ் என்ற பெயரில் கூட்டுப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன.

இந்த ஆண்டு ஏழாவது முறையாக இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெற்றுள்ளது. (ஐ)

## கஞ்சிப்பான இம்ரான் சிறையில் போராட்டம்

பூஸா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பாதாள உலக கோஷ்டியின் முக்கியஸ்தர் கஞ்சிப்பான இம்ரான் , தனது தந்தையார் மற்றும் சகோதரன் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

சிறை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி அவர்களை விடுதலை செய்யும் வரை இந்த உண்ணாவிரதம் தொடருமென அவர் தெரிவித்தார் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.


இதேவேளை, இம்ரானுக்கு உணவு எடுத்துச் சென்ற பிளாஸ்ரிக் வாளி ஒன்றுக்குள் மறைவாக வைக்கப்பட்டிருந்த தொலைபேசிகள் குறித்து கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தனியே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறிப்பிட்ட வாளிக்குள் மறைவிடம் ஒன்றைத் தயாரித்த தொழிற்சாலை குறித்து பொலிஸ் தேட ஆரம்பித்துள்ளது.இலகுவில் கண்டுபிடிக்க முடியாத வகையில் வாளியின் அடிப்பாகத்தில் இந்த தொலைபேசிகள் மற்றும் சார்ஜர்கள் வைக்கப்பட்டிருந்தன. (ஐ)

## நெடுங்கேணியில் மினி சூறாவளி

வவுனியா வடக்கு – நெடுங்கேணி பகுதியில் நேற்று முன் தினம் வீசிய மினி சூறாவளியினால் வீடுகள்,கடைகள் சேதமடைந்தன. நேற்று முன் தினம் மாலை நெடுங்கேணியில் இடி, மின்னலுடன் மழை பெய்த போதே மினி சூறாவளி ஏற்பட்டது. இதனால் வீதியோர மரங்கள் சரிந்து வீழ்ந்ததால் போக்குவரத்தும் சற்று நேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

திடீரென வீசிய மினி சூறாவளியுடன் கூடிய மழையினால் வீட் டின் கூரைகள் தூக்கிவீசப்பட்டதுடன் பயன்தரு மரங்களான தென்னை, வாழை மற்றும் பல மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன. (ஐ)



### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கதான். அவரது வாய் எப்போதும் சும்மா இருக்காது. அகப்பட்ட விடயங்களை எடுத் தெறிந்த மாதிரிப் பேசி ஏதாவது சிக்கலை விலை கொடுத்து வாங்குவது அவர் பழக்கம்.

இப்போதும் கூட, உயர்நீதி மன்றத்தை மோசமாக விமர்சித் தார் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்று நடந் துகொண்டிருக்கின்றது. ஜனாதி பதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தான் அவரை விடுவிக்க உயர் நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருக் கின்றார்.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து அவர் கோட்டாபய ராஜ பக்ஷ குறித்து மிக மோசமாக விமர்சித்தார்.

கோட்டாபயவை 'விசர் நாய்' என்று விமர்சித்தார் அவர்.

"விசர் நாய் கடித்தால் தொப் புளைச் சுற்றி 21 ஊசி போடுவது நினைவுக்கு வரும். அதனால் விசர் நாய் என்றதும் அது நினை வுக்கு வர மக்கள் ஓடி விடுவார்கள். கோட்டாபய என்றதும் கூட மக் கள் அப்படித்தான் ஓட்டம் பிடிக் கின்றார்கள். – என்று கூறினார் அவர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிடுகின் றமை தொடர்பாக ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

*“கோட்டாபயவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினை கள் எதுவுமில்லை. கோட்டாபய மீது யாருக்கு அச்சமில்லை? அனைவருக்கும் அச்சம் இருக் கின்றது. ஊடகவியலாளர்களுக் கும் அச்சம் உள்ளது. உங்களில் எத்தனை பேரை கொன்றார்? 36 ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவரை ஊடக வியலாளர்கள் விரும்புவார்களா? விரும்புவதில்லை. அவரைப் பார்க்கும் போது ஓடி விடுவார்கள்.*

*ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது அனைவருக்கும் தெரியும். மஹிந் தவுக்கும் கூட கோட்டாய மீது பயம். நாமல், ஷிராந்தி (மஹிந்த வின் துணைவியார்) என அனை வரும் பயம். அவர் ஆட்சிக்கு வந் தால், தனக்கும் பிரச்சினையாகி விடும் என்பது நாமலுக்கு தெரியும்.*

*கோட்டாபய கட்டுப்பாடு இல் லாத மனுன். மஹிந்த ராஜ பக்ஷவே இதனை அந்தக் காலத்தில் தனிப்பட்ட ரீதியில் கூறியுள்ளார். கோட்டாபயவைக் கட்டுப்படுத்த முடியாதாம். அவ ருக்கு கோபம் வருமாம்.*

*லஸந்த விக்ரமதுங்கவைக் கொலை செய்யும் முன்னர் நடந்த தொலைபேசி உரையாடலின் பதிவுகள் இருக்கின்றன.*

*கௌதம புத்தரை பார்க்கும் போது எமக்கு ஒரு இரக்கம் ஏற்படும். புத்தரை பார்த்தால் மக் கள் அச்சம் கொள்ள மாட்டார்கள், அவரைக் காண்பதற்காக ஓடு வார்கள். யேசுவை பார்த்தால் மக்கள் அன்பில் அவரிடம் செல்வார்கள். விஜயகுமாரதுங் கவை பார்த்தால் மக்கள் அன்பு காரணமாக அவரிடம் சென்று அணைத்துக் கொள்வார்கள். ஆனால், கோட்டபாயவைப் பார்த்தால் மக்கள் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடுவார்கள். அது அவருடைய வரலாறு. அவர் கொலை செய்துள்ளார்;கொள்ளை யடித்துள்ளார். மக்கள் கோட்டாபய வுக்கு பயம், ஆனால் அவருக்கோ நீதிமன்றத்திற்குப் பயம். நீதி மன்றம் என்றதும் அவர் தப்பி யோடி விடுவார். நீதிமன்றம் என் றதும் இல்லாத நோய்கள் எல்லாம் அவருக்கு வந்துவிடும். நீதிமன் றத்திற்கு பயந்து சிங்கப்பூருக்குப் போய் ஒளிந்து கொண்டார். இவை எல்லாம் அனைவருக்கு தெரிந்த கதைகள்.*

*என்னிடம் நீங்கள் அச்சமின்றி பேசுகின்றீர்கள், கோட்டாபயவுடன் பேசும் போது உங்கள் கைகள் நடுங்கும். ஊடகவியலாளர்கள் கோட்டாபயவிடம் கேள்வி கேட்க பயப்படுகின்றனர்.*

*அவரிடம் அவர் சம்பந்தப்பட்ட குற்றங்கள் தொடர்பான கேள்வி களை ஊடகவியலாளர் கேட்ப தில்லை.*

*விசர் நாய் ஒன்று இந்த இடத் திற்கு வந்தால் ஓடுவீர்களா அல்லது அதன் தலையைத் தடவி கொடுப்பீர்களா?.விசர் நாய் கடித்தால் தொப்புளைச் சுற்றி 21 ஊசி போடுவது நினைவுக்கு வந்து ஓடி விடுவீர்கள். இப்படித் தான் கோட்டாபய ராஜபக்ஷ வந் தாலும் பயந்து ஓடி விடுவார்கள்.”*

– என ரஞ்சன் ராமநாயக்க குறிப் பிட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கா மீது பல வழக்குகள் ஏன் என்பது இப்போது புரிகின்றதா?

**- மின்னல் -**

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வுள்ள பலாலி விமான நிலையம், யாழ்ப்பாண விமான நிலையம் எனப் பெயரிடப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு.கவின் மக்களவை உறுப்பினர் கனிமொழி தலைமையிலான தமிழகப் பிரதிநிதிகளிடம், பிரதமர் ரணில் நேற்று முன்தினம் இதனை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் மகளின் திருமணத்துக்காக இலங்கை வந்திருந்த கனிமொழி மற்றும் இந்தியப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினர்.

இதன்போதே பிரதமர் இந்தத் தகவலைத் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன், யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவின் நான்கு விமான நிலையங்களுக்குச் சேவை இடம்பெறும் என்றும் பிரதமர் அந்தக் குழுவினரிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான கப்பல் சேவையின் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் இன்று சந்தித்துப் பேசும்போது இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் பரப்புரை ஒழுங்குகள் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முடிவு எடுக்கப்பட்டதும், இந்தத் திட்டம் வெளிப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஒரே மேடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)‘ மார்ச் 12 இயக்கம்’ இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக, ‘பவ்ரல்’ அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகண ஹெற்றியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக இருக்கும். கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் எதிர்வரும் ஒக்ரோபர் முதல் வாரத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள், கலைஞர்கள், ஏனைய துறை சார்ந்த விருந்தினர்கள் இதில் பங்கேற்பார்கள்.

மேடையில் வேட்பாளர்கள் முன்எழுப்பப்படவேண்டிய கேள்விகளை நாங்கள் செப்ரெம்பர் 20 ஆம்திகதிக்குமுன்னர் கேட்போம்.

இது மக்களைப் பற்றிய விடயங்கள் குறித்து, வேட்பாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வாய்ப்பை வழங்கும்.

கேள்விகளை என்ற rohana paffrelemail.com t[ªÞÁKÂ¼ïV, No.16, Byrde Place, Pamankada Rd, Kirulapana என்ற முகவரிக்கோ அனுப்பலாம்.

இது ஒரு அறிவார்ந்த விவாதமாகவும், நாட்டின் ஜனாதிபதியாக யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க, ஒரு சிறந்த வாய்ப்பாகவும் மாறும் என்று நாங்கள் நம்புகிறோம். என்றும் அவர் கூறினார். (ஐ)

## தவிசாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சர் தயா கமகே நியமிக்கப்படவுள்ளார்.

அதேபோல் அமைச்சர்கள் மலிக் சமரவிக்ரம ,ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரும் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பதவிகளில் இருந்து நீக்கப்படவுள்ளனர்.

அமைச்சர் சஜித்துக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிக் கட்சியின் கட்டுக்கோப்பை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் இவர்கள் இவ்வாறு நீக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பின்னரே இவர்கள் மீதான இந்த நடவடிக்கை எடுக்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே சுஜீவ சேனசிங்க ,அஜித்பெரேரா ஆகிய இராஜாங்க அமைச்சர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அதிரடியாக இந்த மூத்த உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக் கட்சித் தலைவர் ரணில் தீர்மானித்திருப்பது கட்சியின் நிறைவேற்றுக் குழு மற்றும் நாடாளுமன்றக் குழுவில் அவருக்கு இருக்கும் ஆதரவையே காட்டுவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிதியை செலவிட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

ஜனாதிபதித் வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ பல பெரிய கூட்டங்களை நடத்தியுள்ளார், அவற்றில் பெரும்பாலானவை மிகப்பெரியளவில் நடந்துள்ளன. இதற்கு பெருமளவு நிதி தேவைப்பட்டிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரைக்கு சீனா நிதியளிக்கிறதா என்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று, அவரது வெற்றிக்கான பரப்புரைகளில் ஈடுபட்டுள்ள குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கோட்டாபயவுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படும் பெருமெடுப்பிலான பரப்புரைக்கு, சீனா நிதியளித்திருப்பதாக வெளியான தகவல்கள் குறித்து, கோட்டாபயவின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவிடம் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்கு அவர், சீனா தொடர்பு பட்டுள்ளதா என்று தனக்குத் தெரியாது எனப் பதிலளித்துள்ளார்.

எனினும், வணிக சமூகமும், ஏனையதுறைசார் நிபுணர்களும், ஆட்சி மாற்றம் ஒன்றை விரும்புகிறார்கள். தாம் எதிர்பார்க்கும் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர கோத்தாபயவுக்கு ஆதரவு அளிக்கிறார்கள். பல வணிகர்கள் தமது ஆசிகளை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கொடுத்திருக்கிறார்கள். என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ சீனாவுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறார். மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சீனா பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

அத்துடன், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் சீனா பெருமளவில் நிதியைச் செலவிட்டது என்று குற்றச்சாட்டுகள் கூறப்பட்டபோதும் அதனை சீனா நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நல்லாட்சி அரசின் முகாமில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள கருத்தாடல்கள் மற்றும் சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டளவிலும் முன்னெடுக்கப்பட்ட இது தொடர்பான பேச்சுக்களின் பிரதிபலனாக இந்த முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய மகாநாயக்க தேரர்களின் ஆலோசனை மற்றும் ஆசீர்வாதத்துக்கமைய தலைமைப் பிக்குகள் நேற்றுச் சனிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் நேரில் சந்தித்து சபாநாயகர் கரு ஜயசூரியவை வேட்பாளராக நியமிக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளராக கரு ஜயசூரியவை நியமித்தால், அவருக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்கான பகிரங்க நிகழ்வொன்றையும் தலைமைப் பிக்குகளின் வழிநடத்தலின் கீழ் நடத்தவும் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியையும் பிரதமரிடம் தலைமைப் பிக்குகள் வழங்கியுள்ளனர்.

இதனிடையே சிவில் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், கல்வித்துறையைச் சேர்ந்தவர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் இன்று ஞாயிற்றுக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து சபாநாயகர் கரு ஜயசூரியவை ஜனாதிபதி வேட்பாளராக முன்நிறுத்துமாறு கோரவுள்ளனர். அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் ஆகியோரும் பிரதமரை நாளை திங்கட்கிழமை சந்தித்து சபாநாயகர் கரு ஜயசூரியவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கவுள்ளனர்.

சுமார் 69 பேரைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவில் 42 பேரினதும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிலுள்ள 48 பேரில் 30 பேரினதும் நம்பிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது காணப்படுகின்றது என அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழு மற்றும் மத்திய செயற்குழுவிலுள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் ஜனாதிபதி வேட்பாளராக சபாநாயகர் கரு ஜயசூரியவை நியமிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர் எனவும், தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்து பிரதமராக இருக்க வேண்டும் என்பதோடு கட்சியின் தலைமைத்துவமும் அவரிடமே இருக்க வேண்டும் என்கின்ற சிந்தனையும் இவர்கள் மத்தியில் உறுதியாகக் காணப்படுகின்றது எனவும் அறியமுடிகின்றது.

அதேபோல் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்கின்ற குழப்பநிலை நீடித்தபோது ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவி தனக்கு வழங்க வேண்டும் என்பதை முன்நிறுத்தி கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்கம், சட்டம் மற்றும் சம்பிரதாயங்களை மீறி, கட்சிக்கும், கட்சித் தலைமைத்துவத்துக்கும் எதிராக உறுப்பினர்களைத் தூண்டிவிட்டு நாடளாவிய ரீதியில் மக்கள் கூட்டங்களை நடத்திய அவரது செயற்பாடு கட்சியின் நற்பெயருக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கின்றது எனச் சுட்டிக்காட்டுகின்ற அந்தக் குழுவினர், சஜித் பிரேமதாஸவின் இந்தப் பொறுப்பற்ற செயற்பாடு உள்ளிட்ட அவரது நடத்தை குறித்து கட்சித் தலைமைப்பீடம் கவனம் செலுத்த வேண்டும் என்கின்ற வலியுறுத்தலையும் விடுத்திருக்கின்றனர்.

இதனடிப்படையிலேயே நாடாளுமன்றக் குழுவினர் மற்றும் மத்திய செயற்குழுவைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற இந்தக் குழுவினர், கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சபாநாயகர் கரு ஜயசூரியவை நியமிக்கும்படி கோரிக்கை முன்வைக்கவுள்ளனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில், சபாநாயகர் கரு ஜயசூரியவை வேட்பாளராக நியமிக்கும்படியான கோரிக்கை ஒன்றும் கூட்டமைப்பினர் இதன்போது முன்வைக்கவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சபாநாயகர் கருஜயசூரிய நியமிக்கப்பட்டதன் பின்னர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து அவர் உத்தியோகபூர்வமாக விலகி அனைத்து இன, மத மற்றும் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படும் பொது வேட்பாளராக முன்வரவுள்ளார்.

அதற்கமைய தேர்தல் வெற்றியின் பின்னர் ஒரு வருடத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி, அதன் அதிகாரங்கள் அனைத்தையும் நாடாளுமன்றத்துக்கு வழங்கி அதனூடாக அமரர் மாதுளுவாவே சோபித தேரரின் கனவை நனவாக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். (ஐ)

## அதிரடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அரியாலைப் பகுதியில் உழவு இயந்திரச் சாரதி மீது விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதனால் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் அரியாலை முள்ளிப் பகுதியைச் சேர்ந்த கிருஸ்ண ராஜா சஜித்(வயது-20) என்ற இளைஞனே வலது காலில் துப்பாக்கிச்சூட்டுக்குஇலக்காகியுள்ளார்.

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தப்படுவதாகச் சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தகவல் கிடைத்ததாகவும், அது தொடர்பில் விசாரணை செய்ய முற்பட்டபோது உழவு இயந்திரச் சாரதி சிறப்பு அதிரடிப்படையினரின் வாகனத்தை மோத முயற்சித்தார் எனவும் அதனாலேயே விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## கூட்டமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரணில் விக்கிரமசிங்கவை அன்று சந்திப்பார்கள்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி இதுகுறித்து ஆராயவுள்ளனர். பின்னர் மாலை 3 மணிக்கு அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (ஐ)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விஜயமுனி சொய்சா ஆகியோரின் உறுப்புரிமையே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக அனைத்துக்கட்சிகளும் தற்போது தயாராகி வருகின்றன.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் பொதுஜன பெரமுனவும் தொடர்ச்சியாகக் கூட்டணி பேச்சில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனாலும் இந்த பேச்சு வெற்றியளிக்கும் நிலைமையில் இல்லாதமையால் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பலர் கட்சித்தாவலில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

அந்தவகையில் எஸ்.பி. மற்றும் டிலான் பெரேரா ஆகிய இருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாகவே தேசியப் பட்டியலில் நியமனம் பெற்றனர்.

ஆனாலும், அவர்கள் உட்பட பௌசி, லக்ஷ்மன் யாப்பா, விஜித் விஜயமுனி சொய்ஸா ஆகியோர் பொதுஜன பெரமுனவுக்குத் தற்போது கட்சி தாவியுள்ளனர்.

ஆகையால் அவர்களது உறுப்புரிமையை நீக்கி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை இயங்காது என ஓர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.அவ்வாறான அறிவிப்புக்கள் எவையும் வெளியிடப்படவில்லை. எனவே பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் யாரும் குழப்பம் அடைய வேண்டாம்.

பாடசாலைகள்,அரச திணைக்களங்கள் வழமை போலவே இயங்கும். குறிப்பாக பாடசாலைகள் அனைத்தும் இயங்கும். வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை கல்வி அமைச்சு தற்போது எனது ஆளுகையின் கீழ் உள்ளது. நானோ அல்லது கல்வி அமைச்சின் செயலரோ அவ்வாறான அறிவித்தல்கள் எதனையும் விடுக்கவில்லை.

எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்கள் எவ்வித குழப்பமும் அடையவேண்டாம். பெற்றோர்களும் உங்கள் பிள்ளைகளை வழமையாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பது போல் அனுப்பி வையுங்கள் - என்றார். (ஐ)

## நாமலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பினருமான நாமல் ராஜபக்ஷவின் திருமணத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் அரசியல் கைதியும் அவரது மனைவியும் பங்கேற்றனர்.

பிணையில் வெளியில் வந்துள்ள அரசியல் கைதியான சவரிமுத்து லோகநாதன் என்பவரே இந்த திருமணத்தில் பங்கேற்றார்.

அவர்களை திருமணத்துக்கு அழைத்து வருவதற்குப் பிரத்தியேக வாகனம் ஒன்றும் கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சிறையில் இருந்த நேரத்தில் இந்த அரசியல் கைதியின் நட்பு கிடைத்திருந்தது. அதன் பின்னர் சிறையில் இருந்து வெளியில் வந்த நாமல், அந்த அரசியல் கைதியின் வீட்டிற்குச் சென்று பார்வையிட்டதுடன் அவரது குடும்பத்தினருக்கு தனி வீடு ஒன்றையும் அமைத்துக் கொடுத்திருந்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சமயோசிதமாகக் கையாள்வோம்!

*"ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வரவிரும்புகின்றவர்களுக்கு தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கம் இருப்பின், எம்முடன் அவர்கள் பேச விரும்பினால் அவர்களுடன் பேசுவதற்கு நாம் தயார். கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ யாராக இருப்பினும் அவர்கள் விரும்பினால் அவர்களுடன் நாம் பேசுவோம்."*

– இப்படிக் கொழும்பு நாளிதழ் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

தவிரவும், என்ன விடயம் குறித்துத் தாங்கள் பேச விரும்புகின்றார்கள் என்பது பற்றியும் அந்தச் செவ்வியில் அவர் கோடி காட்டியிருக்கின்றார்.

*"தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நியாயமான நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்பது எமது நிலையான நிபந்தனையாக உள்ளது. அத்துடன் யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களில் நீதி வேண்டும் என்ற காரணியையும் நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்."*– என்று கூறியிருக்கின்றார் அவர்.

நல்லது. நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பது குறித்து பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுடனும் பேசலாம். அந்த விடயத்தில் எவ்வ ளவு தூரம் வரை அவர் செல்வார் என்று அறிவதில் தப்பில்லை.

ஆனால், யுத்த காலங்களில் இடம்பெற்ற கொடூரங்களுக்கு நீதி பெறுவது குறித்து கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசுவதில் அர்த்தம் – நியாயம் – ஏதும் உண்டா என்று கேள்வி எழுகின்றது. "குற்றமிழைத்தவரைப் பார்த்து குற்றவாளிக் கூண்டுக்கு வருகின்றீர்களா? அது குறித்துப் பேசுவோம் வருகின்றீர்களா?" – என அழைப்பு விடுப்பது போலத்தான் அது இருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசுவதாயின் – நாளை, தப்பித்தவறி அவர் ஜனாதிபதியானால் அதன் பின்னர் அவருடன் – பேசுவதாயின் யுத்த காலத்தில் இடம்பெற்ற கொடூரங்களுக்கு நீதி கோருவது குறித்து அவருடன் பேசுவதில் அர்த்தமிருக்கப் போவதில்லை என்பதுதான் நிலைமை.

அத்தகைய சூழ்நிலையில், யுத்தக் குற்றங்களுக்கான நீதியைத் தேடுவதில் சர்வதேசத்தை மட்டுமே நம்பியிருக்கும் – நாடும் – ஒரு வாய்ப்புத்தான் தமிழினத்துக்கு மிஞ்சும்.

*"கடந்த தேர்தலின் முன்னரும் பின்னரும் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றாக இணைந்து ஆட்சிக்கு வரும் – தேசிய அரசை அமைக்கும் – சூழ்நிலை இருந்தமையால் அதுவே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பொருத்தமான – அரிய – சந்தர்ப்பம் என நாம் உணர்ந்தோம். அதனால்தான் தேசிய அரசுக்கு ஆதரவு வழங்கித் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைத்தோம்."* என்றும் சுமந்திரன் விளக்கியிருக்கின்றார்.

அது உண்மைதான். தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சிங்களப் பெரும்பான்மையினரின் ஒரு பெரிய கட்சி முயற்சி எடுத்தால், அதற்கு மற்றைய பெரிய கட்சி முட்டுக்கட்டை போட்டுக் குழப்புவதுதான் கடந்த அறுபது, எழுபது ஆண்டுகளாக இந்தத் தேசத்தில் இடம்பெற்று வந்த அரசியல் துரதிஷ்டமாகும்.

கடந்த பொதுத் தேர்தலை அடுத்து அந்தப் போக்கில் முதல் தடவையாக ஒரு மாற்றம் ஏற்பட்டது.

அது முதல் தடவை மாத்திரம் அல்ல. அதுவே பெரும்பாலும் கடைசித் தடவையும் கூட. தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் – எதிரும் புதிருமாக நிற்கும் அரசியல் தரப்புகள் – இனிமேல் இதுபோல ஒன்றுபடுவதற்கான வாய்ப்புகள் துர்லபமே.

அதுவும், இதுவரை காலமும் இரண்டு பிரதான தென்னிலங்கைக் கட்சிகளாக அவை இருந்தன ஐ.தே.க. மற்றும் ஸ்ரீல.சு.க. ஆகியவையாக அவை அமைந்தன.

ஆனால், அவை இப்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து மூன்று கட்சிகளாகி விட்டன.

போதாக்குறைக்கு, தென்னிலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே.வி.பியும்) நான்காவது பெரிய கட்சியாக வளர்ந்து வருகின்றது.

இந்த நான்கு தரப்புகளையும் ஒன்றிணைத்துத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு சுமுகமான – நீதியான – நிலைத்த – தீர்வை எட்டுவது என்பது இனிமேல் மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலையாகத்தான் இருக்கப் போகின்றது.

கடந்த தடவை தேசிய அரசு அமைந்திருந்தபோது விரைவாக நடவடிக்கைகளை எடுத்துத் தீர்வுக்கான முயற்சிகளைத் துரிதமாக முன் நகர்த்துவதற்கு தவறியதனால் அருமையான சந்தர்ப்பம் இழக்கப்பட்டு விட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

இப்போது நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் அதிகார மாற்றத்துக்கானது. அதை சமயோசிதமாகக் கையாள்வதில்தான் தமிழினத்தின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

# எழுக தமிழ் பேரணியின் வெற்றி தமிழினத்தின் வெற்றியாகட்டும்!

## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ஆதரவு

சென்னை, செப். 15

தமிழர் தாயகத்தில் நாளை நடக்கும் எழுக தமிழ் 2019 நிகழ்வை, வெறும் அரசியல் நிகழ்வாக நாங்கள் பார்க்கவில்லை. ஒட்டுமொத்தத் தமிழினத்தின் உரிமைக்குரலை உலகதிர எடுத்துரைக்கும் அரிய நிகழ்வாகவே பார்கிறோம். எந்த மண்ணில் இன அழிப்பு நடந்ததோ அந்த மண்ணிலிருந்து நீதிக்கான முழக்கம் எழுவது, ஒட்டுமொத்த உலகையும் திரும்பிப் பார்க்க வைக்கும் என்று உறுதியாக நம்புகிறோமென என தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் த.வெள்ளையன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

10 ஆண்டுகள் இழுத்தடித்துவிட்டால், தமிழினம் நம்பிக்கையிழந்து விடும் என்று தப்புக் கணக்குப்போட்டவர்களுக்குப் பாடம் கற்பிப்பதாக யாழ் முற்றவெளியில் நடக்கும் எழுக தமிழ் நிகழ்வு அமைய வேண்டும். எழுக தமிழ்பேரணியின் வெற்றி, ஒட்டுமொத்தத் தமிழினத்தின் வெற்றியாகத் திகழ வேண்டும்.

நாம் பீனிக்ஸ் பறவைகள். சாம்பலிலிருந்து கூட உயிர்த்தெழுகிற வல்லமை படைத்தவர்களென்பதை எழுக தமிழ் வாயிலாக அதை உறுதி செய்வோம்.

கோடானு கோடி தமிழரின் நெஞ்சங்களிலிருந்து, முள்ளிவாய்க்கால் நினைவு மறையவேயில்லை. அது ஒருக்காலும் மறையாது. நீறு பூத்த நெருப்பாக நீதிக்கானஅறஞ்சார் சினம் நமக்குள் கனன்றுகொண்டே இருக்கிறது. தமிழரின் தாய்மண் அதை நிரூபிக்கும் என்ற முழுமையான நம்பிக்கையோடுதான், சென்னையிலும் எழுக தமிழ் நிகழ்வை எழுச்சியுடன் நடத்த முழு மூச்சில் வேலை செய்து வருகிறோம்.

யாழ் மண்ணில் பேரணி நடக்கிற அதே நாளில் அதே நேரத்தில்சென்னை வள்ளுவர் கோட்டத்தில், எழுக தமிழ் ஒன்று கூடலை, இனப்படுகொலைக்கு எதிரான பொதுவானஅமைப்புகளுடன் இணைந்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின்பேரவை நடத்துகிறது.

எங்கள் தொப்புள் கொடி உறவுகளின் போர்க் குரலோடு சேர்ந்து எங்கள் குரலும் ஒலிக்க வேண்டும், தமிழகம் தமிழீழ மக்களுடன் இணைந்தே நிற்கிறது என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்கிற நோக்கத்துடன்தான் களத்தில் இறங்கியிருக்கிறோம் நாங்கள். அரசியல் மாறுபாடுகளைக் கடந்து, சென்னை எழுக தமிழ் நிகழ்வில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள்பங்கேற்க இருக்கின்றமையைப்பெருமையுடன் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகிறது.

எங்கள் தொப்புள்கொடி உறவுகளுக்காக, சென்னையில்நாங்கள் வீதிக்கு வருகிறோம்.

ஒன்றுபட்டு ஒலிக்கிற தமிழினத்தின் குரல், இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுத் தருமென்ற நம்பிக்கையோடு கை கோர்க்கிறோம்.

தமிழர் தாயகமான தமிழீழத்தில் நடந்த அகிம்சைப்போராட்டங்களிலும் சரி, ஆயுதப் போராட்டங்களிலும் சரி, அறம்சார் நெறிகளுடன் தான் தமிழினம் களம் கண்டிருக்கிறது. இப்போது, நீதி கோரி நிகழ்த்தும் போரிலும் நெறி பிறழாமல்தான் நிற்கிறோம் உறுதியுடன்.

நீதியும் நேர்மையும் நிரந்தரமாகத் தோற்றதாய் வரலாறில்லை.

குனிந்து வளைந்தது நிமிர்ந்து எழுவதற்காகத் தான் என்பதை நாம் பறைசாற்றியாக வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

## வவுனியாவில் கடும் மழை



நீண்ட வறட்சியின் பின் வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை கடும் மழை பெய்தது.

நாட்டில் ஏற்பட்ட வறட்சியான காலநிலை காரணமாக வவுனியா மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது. பல்வேறு பகுதிகளிலும் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வந்த நிலையில் திடீரென பெய்த கடும் மழை காரணமாக மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். காற்றுடன் கூடிய மழை காரணமாக மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்திருந்தது. (இ – 100)

# அமெ. – சீனா போட்டியாகவுள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தல்!

## சுட்டிக்காட்டுகிறார் விஜேதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, செப். 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான போட்டியாக அமையப் போவதில்லை. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டியாகவே இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னரே அவ்விரு நாடுகளும் எமது தேர்தல் தொடர்பான வியூகங்களை வகுக்க தொடங்கி விட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் நாங்கள் இன்னும் ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகவில்லை. இன்னும் வேட்பாளர்களை அடையாளம் காணமுடியவில்லை தானே. இன்னும் தெரிவு செய்துதான் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் சீனாவும், அமெரிக்காவும் இந்த ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே ஆரம்பித்து விட்டன. அவர்களுடைய தலையீட்டின் அளவு என்ன என்பதையும், அதனூடாகப் பெறப்படுகின்ற பிரதிபலனுக்கு உரிமை கொண்டாட முடியும் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.



அதனூடாக இந்த நாட்டை அடிமைகளின் தீவுகளாக மாற்றியமைக்க முடியும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகவே இந்த ஜனாதிபதித் தேர்தல் போட்டியானது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் போட்டியல்ல – என்றார். (ஐ)

### நாளை

16.09.2019 திங்கட்கிழமை

நட்சத்திரம்: ரேவதி பி.இ 4.25 வரை
திதி : துதியை பி.ப 1.55 வரை

இராகுகாலம் : 7.33 – 9.03
சுப நேரம் : 12.03 – 1.33

# எழுக தமிழ் - 2019

## செப்ரெம்பர் -16 முற்றவெளி நோக்கி

- ★ சிங்கள, பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து
- ★ சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்து
- ★ தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்
- ★ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்து
- ★ வடக்கு-கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து
- ★ இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமர்த்து என்ற கோசங்களுடன் எழுக தமிழாய் அணிதிரள்வோம் வாரீர்!

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டமே. எழுக தமிழாய் எழுவோம் வாரீர்!!




முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நிகழ்த்திய அகந்தையோடு சிங்கள பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும் இல்லாதளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்மண்சிதைவுற்று, தமிழரின் குடித்தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கில் இருந்து கிழக்கைப் பிரித்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. தோற்கடிக்கப்பட்ட மக்கள் என்ற மனநிலையுடன் தமிழ் மண் அரசியற் சகதிக்குள் மூழ்கியுள்ளது.

தமிழ் மக்கள் எதிரியின் காலடியில் சிக்குண்டு கிடக்கின்றனர். நம்பிக்கையற்ற நடை பிணங்களாய் ஈழத்தமிழ் மக்கள் அரசியற் பாலைவனத்தில் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்த காலத்தை விடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் இன்று மிகப் பெரியதாகியுள்ளன.

சர்வதேசத்தின் முன் நாம் வைத்த கோரிக்கைகளும் புவிசரர் அரசியலில் பந்தாடப்படுகின்றன. நம்பிக்கை இழந்த எம்மக்கள் தாமே தலைமையேற்று போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஒருங்கிணைத்து வலுப்படுத்த எழுக தமிழாய் அணிதிரள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும், தொடர்புகளுக்கும்:
தமிழ் மக்கள் பேரவை,
61, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

எம் மக்களின் கோரிக்கைகளை முன்நிறுத்தி தேசமாய் அணி திரள்வோம்!!

# தமிழ் மக்கள் பேரவை

www.elukathamil.com | info@elukathamil.com | tamilpeoplescouncil | 0760025080

# நாட்டின் ஒரே மொழியாக ஹிந்தி இருக்க வேண்டும்

## அமித் ஷா கருத்து



புதுடில்லி,செப்.15

நாட்டின் ஒரே மொழியாக ஹிந்தி இருக்க வேண்டும் என மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா தனது டுவிட்டர் பக்கத்தில், "நாட்டில் அவரவர் தாய்மொழியையே பேசும் அதே நேரத்தில் ஹிந்தியையும் அனைவரும் கற்க வேண்டும். மக்கள் ஹிந்தியில் பேசுவதற்குக் கற்க வேண்டும். நாட்டின் ஒரே மொழியாக ஹிந்தி இருக்க வேண்டும்.

ஹிந்தி ஒரே மொழியாக இருந்தால் உலக அளவில் இந்தியாவை அடையாளப்படுத்த முடியும். பல்வேறு மொழிகள் இந்தியாவில் இருந்தாலும் ஒவ்வொரு மொழிக்கும் தனித்துவம் உண்டு" – எனக் கூறியுள்ளார்.

ஹிந்தி தினத்தையொட்டி 'ஒரே நாடு, ஒரே மொழி' – என்ற கொள்கையின் அடிப்படையில் அமித்ஷா கருத்து தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிந்தியை திணிக்க மத்திய அரசு முயற்சி

## மு.க.ஸ்டாலின் காட்டம்

சென்னை,செப்.15

எந்த பக்கத்தில் இருந்தாவது, எப்படியாவது ஹிந்தியைத் திணித்துவிட மத்திய அரசு முயற்சி செய்வதாக மு.க.ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

ஹிந்தி தினத்தையொட்டி பா.ஜ.க. தலைவர் அமித் ஷா 'ஒரே நாடு; ஒரே மொழி' என்ற அடிப்படையில் வெளியிட்டுள்ள கருத்து கடும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அமித் ஷா வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், நாட்டின் ஒரே மொழியாக ஹிந்தி இருக்க வேண்டும் என்றும், இந்தியாவை ஒருங்கிணைக்க ஹிந்தி மொழியால் மட்டுமே முடியும் என்றும் கூறியிருக்கிறார். ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஒரே மொழி இருப்பதன் மூலம் அது இந்தியாவுக்கான அடையாளமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.



பா.ஜ.க. தலைவரின் இந்த கருத்து, ஹிந்தியை திணிக்க முயற்சி செய்யும் வகையில் இருப்பதாகப் பல்வேறு தலைவர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் கூறுகையில்–

எப்பக்கத்தில் இருந்தாவது, எப்படியாவது ஹிந்தியைத் திணித்துவிட முடியாதா என மத்திய அரசு முயற்சி செய்வதாக குற்றம்சாட்டி உள்ளார்.

மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க .அரசு பல முயற்சி செய்து தமிழகத்தில் ஹிந்தியை நுழைக்க பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# விநாயகர் சிலைக் கரைப்பின்போது பல்வேறு நீர்நிலைகளில் 40 பேர் பலி



இந்தியாவில் விநாயகர் சதுர்த்தியின் போது பல்வேறு நீர்நிலைகளில் விநாயகர் சிலைகளைக் கரைக்கும் போது ஏற்பட்ட அசம்பாவிதங்களில் 40 பேர் மூழ்கி உயிரிழந்தனர்.

மிகப்பெரிய விபத்து போபாலில் படகு கவிழ்ந்ததில் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மட்டும் 11 பேர் படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தனர். மும்பை, புனே,நாக்பூர், நாசிக், ரத்னகிரி உள்ளிட்ட மகாராஷ்ட்ராவின் 11 மாவட்டங்களில் 23 பேர் விநாயகர் சிலைகளைக் கரைக்கும்போது உயிரிழந்தனர்.

டெல்லியில் இரண்டு பெண்கள் உள்பட நான்கு பேர் விநாயகர் சிலையைக் கரைத்து விட்டு ஆற்றில் குளிக்கும் போது மூழ்கி விட்டனர். மொர்தாபாத்திலும் இருவர் நீரில் மூழ்கி இறந்தனர்.

தடை செய்யப்பட்ட இடங்களில் நீரில் விநாயகர் சிலைகளைக் கரைக்க சென்றமையால்தான் உயிர்ச்சேதம் அதிகரித்திருப்பதாக காவல்துறையினர் கூறுகின்றனர்.

அரசு அனுமதித்த இடங்களில் மிகுந்த கவனமாக விநாயகர் சிலைகளைக் கரைத்திருந்தால் இந்த விபரீதத்தை தவிர்த்திருக்கலாம் என்றும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

## டுபாய் விமான நிலையத்தில்

# இரு மாம்பழங்களினால் இந்திய ஊழியர் கைது!

டுபாய்,செப்.15

டுபாய் விமான நிலையத்தில் இரு மாம்பழங்களால் இந்திய ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உலகிலேயே அதிக பயணிகள் வந்து செல்லும் விமான நிலையங்களில், டுபாய் விமான நிலையமும் ஒன்றாக உள்ளது. இந்த விமான நிலையத்தில் இந்தியர் ஒருவர் ஊழியராக பணியாற்றி வந்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஒரு நாள், அவருக்கு பணியின்போது கடுமையான தாகம் எடுத்துள்ளது. சுற்றிப் பார்த்தும் எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கு கன்வேயர் பெல்டில் பயணிகளின் லக்கேஜ்ஜிகள் சென்று கொண்டிருந்தன.

அதன் அருகே சென்று இந்திய பயணி ஒருவரின் 'பாக்'கைத் திறந்து தண்ணீர் இருக்கிறதா எனப் பார்த்துள்ளார். ஒரு பொக்ஸ் இருந்துள்ளது. திறந்து பார்த்தபோது மாம்பழங்கள் இருந்துள்ளன. அதில் 2 மாம்பழங்களை தின்றுவிட்டு வழக்கம்போல அவர் பணியைத் தொடர்ந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அவருக்கு பொலிஸாரால் அழைப்பாணை அனுப்பப்பட்டது. பின்னர் அவர் தங்கியிருந்த அறையில் பொலிஸார் பொருள்கள் ஏதும் உள்ளனவா எனச் சோதனை செய்துள்ளனர். ஆனால், எதுவும் சிக்கவில்லை. பின்னர் சி.சி.டி.வி. காட்சிகளைப் பார்த்தபோது பயணியின் பொதியை அவர் திறந்துள்ளமை தெரிய வந்தது.

இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இது குறித்து இந்திய ஊழியர் கூறுகையில்,

'கடுமையான தாகம். அருகில் எங்கும் தண்ணீர் இல்லை. பெட்டியில் இருந்த 2 மாம்பழங்களை தின்றேன்' எனக் கூறியுள்ளார். இதனையடுத்து இந்த வழக்கின் தீர்ப்பு வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# விக்ரம் லாண்டருடன் தொடர்பு ஏற்படுத்தும் வாய்ப்பு மங்குகிறது

## இஸ்ரோ மூத்த அதிகாரி தகவல்



பெங்களூரு,செப்.15

நிலவில் வீழ்ந்து கிடக்கும் விக்ரம் லாண்டருடன் தொடர்பு ஏற்படுத்தும் வாய்ப்பு மங்கி வருகின்றது என இஸ்ரோ மூத்த அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

நிலவின் தென் துருவப்பகுதியில், கடந்த 7 ஆம் திகதி அதிகாலை சந்திரயான்2 விண்கலத்தின் விக்ரம் லாண்டர் தரை இறங்கி வரலாறு படைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நிலவுக்கு 2.1 கி.மீ. அருகே வந்தபோது அதன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

இருப்பினும் விக்ரம் லாண்டர், தரை இறங்கி இருக்க வேண்டிய இடத்தில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் வீழ்ந்து கிடப்பது தெரிய வந்தது. இதை சந்திரயான்2 விண்கலத்தின் ஒபிட்டர், தெர்மல் (வெப்பப் பதிவு) படம் எடுத்து அனுப்பியது.

அதைத் தொடர்ந்து விக்ரம் லாண்டருடன் தொடர்பு ஏற்படுத்தும் முயற்சியை பெங்களூரு அருகே அமைந்துள்ள இஸ்ரோ தரை கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதேபோன்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நாசாவும் தொடர்ந்து ரேடியோ சமிக்ஞைகளை அனுப்பிவருகிறது.

விக்ரம் லாண்டர் மற்றும் அதனுள் இருக்கிற பிரக்யான் ரோவர் ஆகியவற்றின் ஆயுள்காலம் 14 நாள்கள்தான். ஏற்கனவே நேற்றுடன் 8 நாள்கள் முடிந்தன. இன்னும் 6 நாள்கள்தான் மீதி உள்ளன. அதற்குள் விக்ரம் லாண்டருடன் தொடர்பு ஏற்படுத்தும் வாய்ப்பு மங்கிப்போய் விட்டது.

இதை இஸ்ரோ மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

இதுபற்றி அவர் கூறும்போது, விக்ரம் லாண்டருடன் தொடர்பு கொள்வது படிப்படியாக கடினமாகி வருகிறது. ஒவ்வொரு மணி நேரத்திலும் அதன் பற்றரி சக்தியை இழந்து வருகிறது. அது இயங்குவதற்கு சக்தி இல்லாமல் போய்விடும். கடந்து செல்கிற ஒவ்வொரு நிமிடமும், நிலைமை மோசமாகத்தான் ஆகிறது. எனவே விக்ரம் லாண்டருடன் தொடர்பு ஏற்படுத்தும் வாய்ப்பு மிக மிகக் குறைந்து விட்டது. – எனத் தெரிவித்தார்.

# கருக்கலைப்பின் போது உயிரிழந்த கல்லூரி மாணவியின் உடல் எரிப்பு

## காதலன் கைதானார்

கர்நாடக மாநிலத்தில் கருக்கலைப்பின் போது உயிரிழந்த கல்லூரி மாணவியின் உடலை பெற்றோல் ஊற்றி எரித்த காதலனைப் பொலிஸார் கைது செய்தனர்.

கர்நாடக மாநிலம் கலபுர்கிநகரை சேர்ந்தவர் ஷிபராணி ஜெயபிரபு (வயது 22).

மாணவியான இவர் பைன் ஆர்ட்ஸ் கலைக்கல்லூரியில் படித்து வந்தார். இவருக்கு ரவிக்குமார் என்ற இளைஞரோடு பழக்கம் ஏற்பட்டு காதலாக மலர்ந்துள்ளது. இதனால் ஷிபராணி கர்ப்பமானார்.

இதையடுத்து ஷிபராணி கருவை கலைக்க தனியார் வைத்திய சாலைக்கு சென்றார். அங்கு அவருக்கு போடப்பட்ட அதிக திறன் கொண்ட ஊசியால் ஷிபராணி உயிரிழந்தார். இதனால் பயந்து போன ரவிக்குமார் ஷிபராணி உடலை யாருக்கும் தெரியாமல் எடுத்துச்சென்று தெலுங்கானா மாநிலம் மேடக் மாவட்டத்தில் உள்ள ஜாகீராபாத் காட்டுப்பகுதியில் வைத்து பெற்றோல் ஊற்றி எரித்துள்ளார்.

இதுகுறித்து ஷிபராணியின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் தெலுங்கானாவில் உள்ள காட்டுப் பகுதியில் அவரது உடல் பாதி எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஷிபராணியின் காதலர் ரவிக்குமாரை பொலிஸார் கைது செய்தனர்.

# பிரேசில் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் பலி



ரியோ டி ஜெனிரோ,செப்.15

பிரேசில் நாட்டில் செயல்பட்டு வரும் தனியார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 9 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

பிரேசில் நாட்டில் பாதிம் என்ற தனியார் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இதில் சுமார் 90 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் இரவு இந்த மருத்துவ மனையில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் அங்கிருந்தவர்கள் உடனடியாக அப்புறப்படுத் தப்பட்டனர்.

தகவலறிந்து தீயணைப்புத் துறையினர் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் 2 மணி நேரம் போராடி தீயை அணைத் தனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி 9 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், ஜெனரேட்டரில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்க லாம் என முதல் கட்டமாகத் தகவல் வெளியா னது.

# ஸ்பெயினில் வெள்ளம் ஐந்து பேர் உயிரிழப்பு



மாட்ரிட்,செப்.15

ஸ்பெயின் நாட்டில் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டின் தென் கிழக்குப் பகுதிகளில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக அங்கு வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட் டுள்ளது. பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சுமார் 3500க்கும் மேற்பட்டோர் தங்கள் குடியிருப்புகளை இழந்துள்ளனர்.

மழை வெள்ளம் காரணமாக இதுவரை ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். அல்மோரியா பகுதியில் சுரங்கப்பாதை வழியாக காரில் சென்று கொண்டிருந்த ஒருவர் திடீரென வந்த வெள்ளத்தில் சிக்கி காரில் இருந்தபடியே உயிரிழந்தார். கிரெனடா பகுதியில் வெள்ளத்தின் போது தனது கார் சேற்றில் சிக்கியதால் வெளியேற முடியாமல் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் வேலென்சியா பகுதியில் 51 வயதான பெண் ணும், 61 வயதான அவரது சகோதரரும் காரில் சென்று கொண்டிருந்த போது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர். அதே பகுதியைச் சேர்ந்த காணாமல் போன ஒரு நபரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக அல்மேரியா மற்றும் முர்சியா விமான நிலையங்களில் நேற்றுமுன்தினம் முதல் விமான சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# றொபேர்ட் முகாபேயின் அடக்கம் தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு

## அரசு - குடும்பத்தவர்கள் இணக்கம்

ஹராரே,செப்.15

ஸிம்பாப்வே முன்னாள் அதிபர் றொபேர்ட் முகாபேயின் உடலை ஹராரேவில் உள்ள வீரர்கள் நினைவிடத்தில் அடக்கம் செய்ய அவருடைய குடும்பத்தினர் சம்மதித் துள்ளனர்.



ஸிம்பாப்வே நாட்டில் கடந்த 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 37 ஆண்டுகள் அதிபராக இருந்தவர் றொபேர்ட் முகாபே. கடந்த 2017ம் ஆண்டில் இவரது அரசு கவிழ்க்கப் பட்டதை தொடர்ந்து இவரது சகாப்தம் முடிவுக்கு வந்தது. பிரபலமான அர சியல்வாதியான இவர், வயது மூப்பு நோய் காரணமாக கடந்த வாரம் சிங்கப்பூரில் காலமானார்.

அவருக்கு 95 வயது. இவரது உடல் ஸிம்பாப் வேயில் உள்ள ஹராரே நகரில் இன்று அடக்கம் செய்யப்படும் என தெரிகிறது. இந்நிலையில், அந்நாட்டின் தற்போதைய அதிபர் எமர்சன் நங் கக்வா, முகாபேயின் உடல் ஹராரேயில் உள்ள வீரர்கள் நினைவிடத்தில் அடக்கம் செய்யப்படும் என அறிவித்ததால் பதற்றம் ஏற்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த முகாபேயின் குடும்பத்தினர், 'அவரது அடக்கம் தனியார் நிகழ்ச்சியாக நடத்தப்படும். அரசு நிகழ்ச்சியாக நடத்த அனுமதிக்க மாட்டோம். முகாபேவின் சொந்த ஊரான குடாமாவில்தான் உடல் அடக் கம் செய்யப்படும்' எனத் தெரிவித்தனர்.

அரசு நடத்திய சமரச பேச்சைத் தொடர்ந்து, முகாபேயின் உடலை வீரர்கள் நினைவிடத்தில் அடக்கம் செய்ய அவரது குடும்பத்தினர் ஒப்புதல் அளித்துள்ளனர். முகாபேயின் இறுதிச் சடங்கில் சீன அதிபர் ஜி ஜின்பிங், கியூபாவின் பிரபல தலைவர் ரால் கேஸ்ட்ரோ மற்றும் ஆபிரிக்கா நாடுகளின் அதிபர்கள் பங்கேற்கிறார்கள்.

# பாராகிளைடர் – பாராசூட் வீரர்கள் நேருக்கு நேர் மோதுண்டு விபத்து!

கனடாவில் நடந்த வருடாந்திர பாரா கிளைடிங் போட்டியில் பாரா கிளைடரும், பாராசூட்டும் மோதிக் கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

வருடாந்திர பாராகிளைடிங் கொண்டாட்டங்கள் குய்பேக் நகரில் நடந்து வந்தன. இந்த நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்றனர். அப் போது மலை உச்சி யில் பாரா கிளைடிங் மூலம் ஒரு வீரர் புறப் பட்டு பறந்து கொண் டிருந்தார்.



சிறிது நேரம் காற் றின் வேகத்தில் பறந்துகொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக பாராசூட்டில் வந்த இருவர் பாரா கிளைடரும் மோதி னர். இதில் நிலைதடுமாறிய பாரா கிளைடர் வீரர் மரத்தில் மோதினார். இதில் அவருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

# மது குடிப்பதைத் தடுக்க மனைவியால் சிறை வைக்கப்பட்ட கணவர் மரணம்

லண்டன்,செப்.15

மது குடிப்பதைத் தடுக்க மனை வியால் சிறை வைக்கப்பட்டவர் உயி ரிழந்தார்.

இங்கிலாந்துக்கு உட்பட்ட வேல்ஸ் பிராந்தியத்தை சேர்ந்தவர் கிம் டான்டர் (வயது 50). மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் அண்மைக் கால மாக குடிப் பழக்கத் துக்கு அடிமையாகி விட்டார். இந்த நிலை யில் கிம் டான்டரின் மனைவி குடும்பத் தோடு 'ஷொப்பிங்' செல்ல முடிவுசெய்தார். ஆனால் கணவரை அழைத்துச்சென்றால் தன்னை ஏமாற்றி விட்டு மது குடிக்கச் சென்றுவிடுவாரோ என அவர் பயந்தார். எனவே அவர் கணவர் கிம் டான்டரை, வீட்டு அருகில் உள்ள வாகனங்கள் நிறுத்தும் அறையில் சிறைவைத்து விட்டு, குழந்தைகளை அழைத்துக்கொண்டு 'ஷொப் பிங்' சென்றார்.



அவர்கள் ஒரு மணி நேரம் கழித்து வீடு திரும்பி வந்து பார்க்கையில், சிறை வைக்கப்பட்ட கிம் டான்டர் மயங் கிக் கிடந்தார்.

இதையடுத்து, தக வலின் பேரில் மருத் துவர்கள் விரைந்து வந்து, பரிசோதித்த போது அவர் ஏற்கனவே இறந்து விட்டமை தெரிய வந்தது.

அந்த அறையில் மோட்டார் சைக்கிளை கிம் டான்டர் இயக்கிய போது அதில் இருந்து வெளியேறிய புகையி னால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவர் இறந்த தார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# துருக்கியில் குண்டுவெடிப்பு 7 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

இஸ்தான்புல்,செப்.15

துருக்கி நாட்டில் சாலையோரம் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில், அதில் சிக்கி 7 பேர் பரிதாபமாக உயிரிழந் துள்ளனர்.



ஈராக்கில் உள்ள குர்திஸ்தான் தொழி லாளர்கள் கட்சி என்னும் அமைப்பை அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற் றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் பயங்கர வாத அமைப்பாக அறிவித்துள்ளன.

பெரும்பாலும் ஈராக்கின் வடக்கு பகுதி யில் ஆதிக்கம் செலுத்திவரும் குர்திஸ் தான் தீவிரவாதிகள், கான்டில் மலைப் பகுதியில் முகாமிட்டு இங்கிருந்தவாறு துருக்கி எல்லையில் தற்கொலைத் தாக் குதல் போன்ற தீவிரவாதச் செயல்களை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்ற னர்.

இவர்களை ஒடுக்கும் பணியில் துருக்கி நாட்டின் விமானப்படைகள் ஈடுபட்டுள்ளன. இதனால் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்நிலையில், துருக்கியின் தென் கிழக்கில் உள்ள டியர்பகீர் மாகாணத்துக்கு உள்பட்ட பகுதியில் சாலையின் ஓரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு திடீரென வெடித்தது. இதில் சிக்கி அப்பாவி பொதுமக்கள் 7 பேர் உடல் சிதறிப் பரிதா பமாக உயிரிழந்தனர்.

மேலும், 10 இற்கும் மேற்பட்டோர் இந்த தாக்குதலில் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சுயாதீன புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்படுதல் மிக அவசியம்

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்தல்



கொழும்பு, செப். 15

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, புலனாய்வுப் பிரிவுகள் அரசியல் தலையீடுகளில் இருந்து விடுபட்டுச் சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான பணிகளில் இருந்து விலகி, அரசியல் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப் புலனாய்வுப் பிரிவுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன என்றும் சம்பிக்க ரணவக்க குற்றம்சாட்டினார்.

புலனாய்வுப் பிரிவுகள் அரசியல் தலையீடுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்,என்றும் சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)

# மழை தொடரும்

கொழும்பு, செப். 15

நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை எதிர்வரும் சில நாள்களுக்குத் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



கிழக்கு, ஊவா, வடமத்திய, மத்திய மற்றும்வடக்கு ஆகிய மாகாணங்களில் பிற்பகல் வேளையில் மழைபெய்யக்கூடும்.

இதன்போது, சில பிரதேசங்களில் 75 மில்லி மீற்றர் வரையில் மழை எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான மற்றும் புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ரணிலைப் பாதுகாக்க முனையும் மூன்று பேர்

கொழும்பு, செப். 15

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக சந்திரிகா குமாரதுங்க, தயாசிறி ஜயசேகர மற்றும் துமிந்த திசநாயக்க போன்றோர் திரை மறைவில் செயற்படுகின்றனர் என்றும், பொதுஜன பெரமுன – சுதந்திரக் கட்சி கூட்டணியைத் தோல்வியடைச் செய்வதில் இவர்களே மும் முரமாக இருக்கிறார்கள் என் றும் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சு.க செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் விசுவாசிகளாவர். இதனால் தான் பொதுஜன பெரமுனவையும், மஹிந்த ராஜபக்ஷவையும் வேண்டாமென ஒதுக்கி விட்டு தனித்துச் செல்வது போல் காண்பித்து மறைமுகமாக ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க முனைகின்றனர்.

அது மாத்திரமின்றி மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தயாசிறி ஜயசேகரவும் மறைமுகமாகத் தொடர்புபட்டுள்ளார். கோட்டாபய ஆட்சியமைத்தால் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நிச்சயமாக தண்டனை வழங்கப்படும். எனவே தான் இதிலிருந்து தப்பிப்பதற்காக தயாசிறி இவ்வாறு செயற்படுகிறாரா?– என்றார். (ஐ)

## வவுனியா பூந்தோட்டம் பகுதியில்

# காணமற்போயிருந்த மாணவன் ஆறு நாள்களின் பின்னர் மீட்பு

கடந்த 6 நாள்களாக காணாமல்போயிருந்த 14 வயதுடைய வவுனியா மாணவன் மீட்கப்பட்டுள்ளான் என்று நேற்று முன்தினம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :-

வவுனியா, பூந்தோட்டம், காந்திநகர் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய ஜெயராசா கனிஸ்டன் என்ற பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயலும் மாணவன் கடந்த 7 ஆம் திகதி வேப்பங்குளம் பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் செல்வதாகக் கூறி வீட்டில் இருந்து புறப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் உறவினர் வீட்டுக்கு குறித்த மாணவன் செல்லவில்லை. வீட்டுக்கும் திரும்பவில்லை. இதனை யடுத்து குறித்த மாணவனின் பெற்றோர் உறவினர்களுடன் இணைந்து தேடிய நிலையில் மாணவன் கிடைக்காமையால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்தனர். பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து இருந்ததுடன், ஊடகங்களிலும் மாணவனை காணவில்லை என்ற செய்தி வெளியாகியிருந்தது.

இதனையடுத்து வியாழக்கிழமை இரவு வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள மாணவனின் நண்பன் ஒருவரின் வீட்டில் குறித்த மாணவன் நிற்பதாக நண்பனின் சகோதரனால் மாணவனின் சகோதரர்களுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அங்கு சென்ற பெற்றோரும், உறவினர்களும் மாணவனை அழைத்து வந்ததுடன், வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், நண்பனின் வீட்டிற்கு கரம்போட் விளையாடுவதற்காகவே சென்றான் எனப் பொலிஸாரிடம் மாணவன் கூறியுள்ளான் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ -100)

# சாந்த பண்டாரவுக்கு மீண்டும் எம்.பி பதவி!



கொழும்பு, செப். 15

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சாந்த பண்டாரவின் பெயர் மீண்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மஹிந்த அமரவீர இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

முன்னதாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட சாந்த பண்டார இராஜினாமாச் செய்திருந்தார்.

முன்னாள் அமைச்சரும்– ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாலிந்த திசநாயக்க உயிரிழந்தமையை அடுத்து, வெற்றிடமாகிய அவரது நாடாளுமன்ற உறுப்பினர் ஆசனத்துக்கு தெரிவாகும் நோக்கில் அவர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

எனினும், அந்த வெற்றிடத்துக்கு எச்.எம்.டி.பி. ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான வர்த்தமானி வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடாவிலும் ஆதரவுப் பேரணி

றொறன்ரோ, செப். 15

தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படவிருக்கும் யாழ் எழுக தமிழ் குறித்து அறிந்து அதற்கு ஆதரவாகக் கனடா றொறன்ரோவிலும் எழுக தமிழை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை திங்கட்கிழமை யாழ். முற்றவெளியில் அணிதிரளும் அதே நேரத்தில் கனடா றொறன்ரோவில் உள்ள அமெரிக்க துணை தூதரகத்திற்கு முன்பாக ஒன்று கூடி ஆதரவுப் பேரணி ஒன்று நடத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. (ஐ)



# தமிழ்நாட்டிலும் நாளை எழுக தமிழ்

யாழ்ப்பாணம், செப். 15

தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படவிருக்கும் யாழ் எழுக தமிழ் குறித்து அறிந்தவுடன் அதற்கு ஆதரவாக தமிழ்நாட்டிலும் எழுக தமிழை சமகாலத்தில் முன்னெடுக்க ஈழத் தமிழர் ஆதரவு தரப்பினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள்.

'தமிழீழ உறவுகளின் உரிமைகளை மீட்போம்; இன அழிப்புக்கு நீதி கேட்போம்' என்ற முழக்கத்துடன், முள்ளிவாய்க்கால் படுகொலைக்குச் சர்வதேச நீதி கேட்கத் திரளுவோம் என்ற அறைகூவலுடனும், யாழ் முற்றவெளியில் அணிதிரளும் அதே நேரத்தில் தமிழ்நாடு சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் பகுதியில் கண்டன முழக்க ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இனப்படுகொலைக்கு எதிரான அமைப்புகளுடன் இணைந்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தக் கண்டன முழக்கப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான கட்சிகள், அமைப்புகள், இயக்கங்கள் என்பன பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் மக்களின் இருப்புக்காக எழுக தமிழில் பங்கேற்போம்

## சிவசக்தி ஆனந்தன் அழைப்பு



வவுனியா, செப். 15

தமிழ் மக்களின் இருப்புக்காக எழுக தமிழில் அனைவரும் கலந்து கொள்வோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இன்று வரை எட்டப்படவில்லை என்பதுடன் இறுதிப் போரின்போது நடைபெற்ற போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிராக நடத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து நீதி நிலை நாட்டப்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியும் இன்று வரை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெரிவிப்பதற்கு அரசுக்கு இன்னமும் துணிவு வரவில்லை.

அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்க அரசியலின் மூலம் கடந்த நான்கு வரவு – செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புத் தரப்பினரின் செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகரித்த நிதிக்கும் ஆதரவு அளித்துக் கூட எமது மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. மாறாகக் கையெடுத்து வணங்க வேண்டிய புத்தபெருமானை நில ஆக்கிரமிப்பாளராகவும் அரச அனுசரணையுடன் வடக்கு – கிழக்கில் தமிழர்கள் தாயக பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்தின் சின்னமாகவும் இலங்கை அரசு முன்னிலைப் படுத்துகின்றது.

புதிய அரசு இரண்டு பிரதான கட்சிகளை உள்ளடக்கியதாக உள்ளது அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கண்டுவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனவுகள் கூட தகர்த்தெறியப்பட்டுள்ளன. ஆகவே எமது நாளாந்தப் பிரச்சினை முதல் அரசியல் தீர்வுவரை எந்தவொரு விடயமும் தீர்க்கப்படவில்லை என்பதை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் மிகவும் வலிமையுடனும் உறுதியுடனும் ஜனநாயக ரீதியிலும் போராடுவதற்கு தமிழ் மக்கள் பேரவை ஒன்றே எமக்கு இன்று இருக்கும் ஒரு பிரதான தளமாகும்.

எனவே அனைத்து தமிழ் மக்களும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து பொது அமைப்புக்களும் நாளை காலை தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப் பட்டுவரும் எழுக தமிழ் 2019 இல் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

(ஐ – 100)

# மின்தடை


யாழ்ப்பாணம், செப். 15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16.09.2019 திங்கள் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

**யாழ் பிரதேசத்தில் -**

அல்வாய், மாலுசந்தி, வியாபாரி மூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாடசாலை, பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, VM வீதி, தம்பசிட்டி, சாளம்பை, புனித நகர், மாதனை, கற்கோவளம், வெளச்ச வீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை, மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பொயமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் – யாழ் நுண்கலைப்பீடம் ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# தாமரைக் கோபுரத்துக்கான நினைவு முத்திரை அறிமுகம்



கொழும்பு, செப். 15

தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமான தாமரைக் கோபுரத் திறப்பு விழாவை முன்னிட்டு நினைவு முத்திரை ஒன்றை வெளியிட அரச தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நாளை தாமரைக் கோபுரத் திறப்பு விழாவுடன் இந்த நினைவு முத்திரையும் வெளியிடப்படவுள்ளது.

இந்த முத்திரையின் பெறுமதி 45 ரூபா என தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த தாமரை கோபுரத் திறப்பு விழா நிகழ்வை பார்ப்பதற்கு, மக்களும் ஆர்வமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையை எச்சரித்த ஐ.நா பிரதிநிதி!



கொழும்பு, செப். 15

காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படத்தக்க பாதிப்புக்களினால் இலங்கையின் வாழ்க்கைத்தர மட்டம் 5 – 7 சதவீதம் வீழ்ச்சியடையும் நிலையேற்படும் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் எச்சரித்துள்ளார்.

பொருளாதாரம் மற்றும் வாணிப விஞ்ஞானத்தில் மாணவர்களுக்கான சர்வதேச அமைப்பின் கூட்டத்தொடரில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் 'இளைஞர்களை மாற்றியமைத்தல், இலங்கையை மாற்றியமைத்தல்' என்ற தலைப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை கடந்த காலங்களில் வெள்ளப்பெருக்கிற்கும், கடுமையான வறட்சிக்கும் முகங்கொடுத்து வந்திருக்கின்றது. இத்தகைய நிலைமைகள் காலநிலை மாற்றத்தினால் வெகுவாகப் பாதிக்கப்படக் கூடிய நாடாக இலங்கையை மாற்றியிருக்கின்றன. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் தற்போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

ஏனெனில் காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படத்தக்க பாதிப்புக்களினால் இலங்கையின் வாழ்க்கைத்தர மட்டம் 5 – 7 சதவீதம் வீழ்ச்சியடையும் நிலையேற்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# மொட்டு சின்னத்தில்தான் பெரமுன போட்டியிடும்!

## கெஹலிய திட்டவட்டம்



மக்களிடம் பிரபலமான கட்சியாக பொதுஜன பெரமுன தற்போது உள்ளமையினால் எதிர்வரும் தேர்தல்களில், தாமரை மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மொட்டுச் சின்னம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நியமிக்கப்படும் ஜனாதிபதி வேட்பாளரால் ஒருபோதும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதை அந்தக் கட்சியினர் அறிவார்கள் .

இந்நிலையில் சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைவதை விரும்பாத பலர், ஜனாதிபதி வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ, மொட்டுச் சின்னத்திலன்றி வேறு சின்னத்தில் போட்டியிடவேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

ஆகையால் இவர்கள் கூறுவதனை எல்லாம் கவனத்தில் கொள்ள முடியாது. பொதுஜன பெரமுன மொட்டுச் சின்னத்தில்தான் போட்டியிடும் – என்றார். (ஐ)

# கூட்டணிக் கட்சிகளும் சஜித்துக்கே ஆதரவாம்!

## அஜித் பெரேரா கூறுகிறார்

கொழும்பு, செப். 15

தங்களுடன் கூட்டணி அமைத்துள்ள அனைத்துக் கட்சிகளும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளன என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.



அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களினதும், செயற்குழுவினதும் அதிகாரம் சஜித் பிரேமதாஸ தரப்புக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் ஆதரவும் சஜித் பிரேமதாஸவுக்கே உள்ளதாகவும் அவர் மேலும் குறிப் பிட்டார். (ஐ)

# சர்வாதிகாரத்தால் எதுவும் கிட்டாது

## கூறுகின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, செப். 15

சர்வாதிகாரத்தால் எந்த முன்னேற்றமும் கிடைக்கப் போவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெள்ளை வான் கலாசாரத்தினூடாக ஜனநாயக இலக்குகளை அடைய முடியாது. சகலருடனும் ஒற்றுமையாக செயற்படுவதினூடாகவே இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாதவர்களே சர்வாதிகார பாதையைத் தேர்ந்தெடுப்பார்கள்.

சர்வாதிகாரத்தால் எந்த முன்னேற்றமும் கிடைக்கப் போவதில்லை. சர்வாதிகாரத்தால் எதனையும் சாதிக்கலாம் என்று ஒரு சிலர் நம்புகிறார்கள்.



அதற்கு மாறாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாவிட்டாலும் ஜனநாயகத்தால் எதனையும் வெற்றிக் கொள்ள முடியும் என்பதை கடந்த நான்கரை வருடங்களில் நிரூபித்து காட்டியுள்ளோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையின்றிப் பல்வேறு பணிகளை எம்மால் முன்னெடுக்க முடியுமாக இருந்தால் பெரும்பான்மை கிடைத்தால் இதனைவிட பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

கட்டட நிர்மாணங்களை மேற்கொண்டது போன்று மறுபுறம் ஜனநாயகத்தையும் படிபடியாகக் கட்டியெழுப் பியுள்ளோம். கடந்த அரசால் இந்த அரசுக்கு அதிகளவான கடன் சுமையையே கொடுக்க முடிந்தது.

சுமைகளின் மத்தியில் ஆட்சியைப் பொறுப்பேற்று கொண்டிருந்தாலும் சவால்களைப் பொருட்படுத்தாமல் சிறந்த வெற்றி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது – என்றார். (ஐ)

# ஜனாதிபதியின் உத்தரவுக்கு எதிராக நீதிமன்றத்துக்கு செல்கிறது ஐ.தே.க.

கொழும்பு, செப். 15

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஊடகத்துறை அமைச்சர் ருவன் விஜேவர்த்தனவின் கீழ் இருந்த ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை, தன்வசமுள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 10ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

இதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசும், ஊடக சுதந்திர அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. (ஐ)

# யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், செப். 15

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்நகர், பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ACV) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் நாளை 16 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – நாவலர் மண்டபம் நாவலர் வீதி.
* 11.00 முதல் 1.00 வரை – ராசாவின் தோட்ட வீதி, ஸ்ரானிலி வீதிச் சந்தி
* 2.30 முதல் 4.00 வரை – கோவில் வீதி, நக்காவீதி சந்தி.

நாளை மறுதினம் 17ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – மருதடி லேன், வைரவர் கோவிலடி.
* 11.00 முதல் 1.00 வரை – நல்லூர் தெற்கு சனசமூக கற்பக பிள்ளையார் கோவிலடி.
* 2.30 முதல் 4.00 வரை – நக்கா வீதி, இளஞ்சிங்கம் சனசமூகநிலையம்.

எதிர்வரும் 18 ஆம் திகதி –

* 9.00 மணி முதல் 11.00 வரை – கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி சந்தி.
* 11.00 முதல் 1.00 வரை – குழந்தை யேசு ஆலயத்திற்கு முன்பாக கோயில் வீதி.
* 2.30 முதல் 4.00 வரை – மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம்.

# ஒக்ரோபர் 15 இற்கு முன் தேர்தலுக்கான அறிவிப்பு



கொழும்பு, செப். 15

ஜனாதிபதித் தேர்தலுக்கான அழைப்பை விடுப்பது குறித்து அரசியல் கட்சிகளால் தீர்மானிக்க முடியாது என்றும் அதனை தேர்தல்கள் ஆணைக்குழுவே முடிவு செய்யும் என்றும், ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

செப்ரெம்பர் 15 (இன்று) ஞாயிற்றுக் கிழமையாக இருப்பதால், தேர்தல் அறிவிப்பை முன்கூட்டியே வெளியிடுவதாயின், செப்ரெம்பர் 16 ஆம் திகதி வெளியிட முடியும்.

எனினும், தேர்தல் நடத்தக்கூடிய முந்திய காலத்தில் நாங்கள் தேர்தலை அறிவிக்கமாட்டோம் என்று கூறி இருந்தோம்.

தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடி, பொருத்தமான நாளில் தேர்தல்களை அறிவிக்கும்.

அது செப்ரெம்பர் 16 முதல் ஒக்ரோபர் 15 வரையுள்ள எந்த நாளாகவும் இருக்கலாம். அந்த நாளைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு மட்டுமே உள்ளது.

ஒக்ரோபர் 16ஆம் திகதிக்குப் பிந்திய எந்த நாளிலும் வேட்புமனுவைக் கோரலாம்.

முன்னதாக நாங்கள் முடிவு செய்யலாம் என்று நினைத்தால், இந்த மாத இறுதிக்குள் அறிவிப்போம் – என்றார்.





பார்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

# ஆழ்கடலில் அக்கினிப் பரீட்சை!

இதயத்தை உறைய வைக்கும்காட்சி, இந்த இனிய பயணத்தில் எப்படிப் புகுந்ததோ? இது என்ன கனவா நிஜமா? கடலில் சொகுசாக மிதக்கும் கப்பல் பயணத்தில் கிறிஸ்மஸ் காலத்தில் விடுமுறை கனவில் வந்தவர்களுக்கோ திகில்.

தண்ணீரில் மிதக்கும் சொர்க்க புரியில் தீயா? அந்த இரவில் வந்த அறிவிப்பு கப்பலின் ஸ்பீக்கர்களில் இருந்து காதில் நாராசமாகப் பாயவும்அனைவரும் குய்யோ முறையோ வென்று துடித்தெழுந்து நடைபாதைக்கு விரையவும் இரவில் இருளைக் கிழிக்கும் தீ நாக்குகள் கண்களில் தென்படலாயின. கருகி எரியும் பொருள்களின் வாசனையும் புகை மண்டலமும் வேறு பீதியை பலமடங்காக்கின.

ஆம் அந்த Norman Atlantic என்ற 186 மீற்றர் நீளமான எண்ணூறு பயணிகளையும் இருநூறு வாகனங்களையும் சுமந்து பயணிக்க வல்ல கப்பல் 28 டிசெம்பர் 2014 அன்று இரவு கிரேக்க தேசத்தின் மூன்றாவது பெரிய துறைமுக நகரமான பற்றாசில் இருந்து மத்திய இத்தாலியின் துறைமுக நகரமான அங்கோனா நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது.

கப்பலில் 487 பயணிகள் 55 சிப்பந்திகள் மற்றும் 222 வாகனங்கள் பிற உடைமைகள்



அனைத்தும் நான்கு உயிர்காப்பு படகுகளை மட்டும் நம்பிய பயணம் அது. 640 பேரை காப்பாற்ற போதியவையாக அவை இருந்த போதிலும் அவற்றில் இரண்டு படகுகளை தீ நாக்குகள் கபளீகரம் செய்து கொண்டன.

கப்பலின் வாகனத் தளத்திலேயே இந்த அக்கினிக் குஞ்சு உருவாகிவிட்டது. வாகனங்களின் எரிபொருள் தாங்கிகள் தீப்பற்றிக் கொண்டால் மிகுதியை சொல்லவா வேண்டும்?

கப்பலின் சுமார் ஆயிரம் கி.மீ பயணப் பாதையில் முந்நூறு கி.மீ அளவில் பயணம் செய்த நிலையில் இத் தீ அனர்த்தத்தில் கப்பல் சிக்கிக் கொண்டுள்ளது. 2009 இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த 26,904 தொன் எடை கொண்ட இக் கப்பல் ஐந்து ஆண்டுகள் வெற்றிகரமாக தனது சேவையைத் தொடர்ந்து இருக்கிறது. இன்று அது தனது இறுதி யாத்திரையை தொடங்கி இருக்கிறது என்பதனை பயணத்தின் ஆரம்பத்தில் யாரும் உணர்ந்து இருக்கவில்லை.

நற்ஸா என்ற பெண்மணி தனது திகில் அனுபவம் பற்றி விவரிக்கையில் தனது 14 மற்றும் 11 வயதுடைய இரண்டு புதல்வர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையது என்கின்றார். அறிவிப்பு வெளியானதும் தமது குடும்ப பயணிகள் கூடத்தில் இருந்து கணவர் வெளியே வந்தபோது ஓடையில் பலரும் அவதிப்படுகின்றமையையும் அதனை அறிந்து பேயறைந்த முகத்தினளாய் தான் துடித்து பிள்ளைகளை துயிலெழுப்பினார் எனவும் தெரிவிக்கிறார்.

புகைமூட்டம் கப்பலின் அறைகளை நிரப்பிக் கொண்டது. தமது வசதியான சொகுசு அறைகளுக்குள் உறக்கத்தில் இருந்தவர்கள் வேறு வழியின்றி வெளிப்படலாகினர்.

கப்பலில் வைத்து ஓர் ஆபத்து என்றால் இயல்பாகவே அனைவரும் மேல் தளத்திற்குத்தான் வருகிறார்கள். கடைசியாக தாழலாம் எனவே உயிரை கூடிய நேரம் தக்க வைக்கலாம் என்கின்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணம். இங்கும் அதுதான் நிகழ்ந்தது. நூற்றுக்கணக்கில் அவர்கள் பதற்றத்துடன் மேலே ஏறிக் கொண்டனர். கப்பல் அமிழ்ந்து கொண்டால் நீந்தி ஆதல் தப்பிக்க மேல் தளம் வசதியானது என்பது நீச்சல் தெரிந்தவர்களின் எண்ணம். என்றாலும் அவர்கள் அனைவரும் நவரத்தின சாமிகள் அல்லர்.

மேல் தளத்திற்கு வந்தபோது தீச் சுவாலை கள் அங்கேயும் தலைகாட்டி இருந்தன. குளிர்ந்த கடற் காற்று வீசி அவற்றை தீப்பந்துகளாக உருட்டிக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கில் அங்கே கூடியவர்களின் அவல ஓலம் உதிரத்தை உறைய வைத்துக் கொண்டிருந்தது.

டைட்டானிக் அனர்த்தத்தின்போது குடும் பங்கள் பிரிக்கப்பட்டன. குழந்தைகள் அடுத்து பெண்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் ஆள்கள் வெளியேற்றப்பட்டார்கள். இதனை நினைத்த போது நற்ஸாவுக்கு மேலும் நடுக்க மெடுத்தது. கடைசியாக மீட்கப்பட வேண்டிய மனிதனாக அல்லது கப்பலோடு தாழ வேண்டியவனாக கப்பல் தலைவன் இருப்பது போல, மீட்பு வரிசையில் முன்னுரிமையில் குழந்தைகள் அடுத்து சிறுவர்கள் அடுத்து பெண்கள் வருகிறார்கள். பரிதாபம் ஆண்கள் தெம்பு இருந்தால் குதித்து நீந்த வேண்டியதுதான்.

பலரும் தமது அன்பிற்கு உரியவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தனர். இந்த அழைப்பு வாழ்க்கையின் ஓர் இறுதிச் சந்தர்ப்பம் என்கின்ற உணர்வு அவர்களிடம் தொனித்தது. வயதானவர்கள் கூட தமது பெற்றோரிடம் பேசி அவர்களையும் கலவரப்படுத்திக் கொண்டிருந்தனர். இதனைக் கண்ட குழந்தைகளின் அச்சம் மேலும் பலமடங்கு எகிறலானது.

நாங்கள் என்னம்மா செய்வது என்று கண்களில் நீர் கோர்க்க கேட்கும் குழந்தைகளிடம் பிரார்த்தனை செய்யச் சொல்லுவதை தவிர வேறெந்த மார்க்கமும் பெற்றோரிடம் தென்படவில்லை. பலரும் குழந்தைகளை அரவணைத்தபடி தவித்துக் கொண்டனர்.

கைகளில் பணப்பை பாஸ்போட் சில முக்கிய ஆவணங்கள் சகிதம் பலர் தவித்தார்கள். இவற்றைகைவிட்டுதாங்கள் தப்பி என்ன செய்வது என்கின்ற திகைப்பு அவர்களிடம்.

ஐம்பெரும் பூதங்களில் நீர் தீ காற்று என்பன தமது சக்தியை, மனிதவலு எம் மாத்திரம் என் பதனை உறுதி செய்யுமாப்போல, காட்டிக் கொண்டிருந்தன. கீழே வாகனத் தளத்தில் வாகன எரிபொருள் ரயர்கள் மற்றும் இறப்பர் பொருள்கள் பாகங்கள் கொழுந்து விட்டெரிய கப்பலின் உலோகதளங்கள் பெரிய தோசைக் கல்லாக சூடாவதால் சப்பாத்துக்கள் பொசுங்கிப் போவதைசிலர்உணர்ந்து கொண்டார்கள்.

கப்பலில் 499 மனிதர்கள். ஒவ்வொன்றும் சுமார் 160 பேரை ஏற்றவல்ல நான்கு உயிர்காப்பு படகுகள். எனவே 640 பேரை காப்பாற்ற அவை போதுமானவை என்றாலும் அந்த இக்கட்டில் இவற்றையெல்லாம் எவரறிவார்?

அவற்றில் இரண்டு படகுகள் தீயுடன் சங்கமிக்க ஒன்றில் 49 பேர் வல்லவர்கள் மட்டும் தப்பிக்க மீதி 450 பேருக்கும் என எஞ்சியதோ ஒரே ஓர் ஆபத்துக்கால படகு மட்டுமே. அங்கு விதிகள் பின்பற்றப்படவுமில்லை. காட்டுச் சட்டமே அவரவரால் கைக்கொள்ளப்பட்டது.

அப்படியானால் எஞ்சப் போவதும் தீயுடன்



சங்கமிக்கப் போவதும் குழந்தைகளும் பெண்களுமா என்கின்ற அச்சநிலை உருவானது. வரிசையில் படகேற காத்திருந்தவர்களை தீச் சுவாலைகள்வேறு கருவாடு போடத் துடித்தமை மேலும் வரிசைகளைக் குழப்பியடித்தது.

அதனூடாக துணிந்து கடந்தவர்கள் சிலர் அந்த ஒரேஞ் நிறமான படகில் இடம் பிடித்துக் கொண்டனர். காலை 7.00 மணி இருக்கும்



அந்தக் கடைசி உயிர்காப்பு படகு நிறைந்த பயணிகளுடன் கடலைத் தொட்டது. தாய்க் கப்பலில் இருந்து உதைப்புடன் விடுபட்டதும் காற்றிலும் அலைகளிலும் அது பேயாட்டம் போட்டது.

(இன்னும் வரும்)

## மொசாம்பிக் மக்களுக்கு அமைதியில் வாழ உரிமை உள்ளது: திருத்தந்தை பிரான்சிஸ்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மொசாம்பிக் மடகாஸ்கர் மற்றும் மொரீஷியஸ் நாடுகளில் 31ஆவது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தை நிறைவு செய்து 10 செப்ரெம்பர் 2019 அன்று வத்திக்கான் வந்தடைந்தார். ஆபிரிக்க கண்டத்திற்கு நான்காவது முறையாகச் சென்று திரும்பியுள்ள திருத்தந்தை தான் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்திற்கு அன்னை மரியாவிற்கு நன்றியும் செலுத்தினார்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## அன்னை மரியாவிற்கு நன்றி செலுத்தினார் திருத்தந்தை

உரோம் சம்ப்பினோ விமான நிலையத்திலிருந்து வத்திக்கானுக்குக் காரில் திரும்பியபோது மேரி மேஜர் அன்னை மரியா பசிலிக்காவிற்குச் சென்று உரோம் மக்களுக்குச் சுகமளிக்கும் அன்னை மரியாவின் பீடத்தடியில் மலர்களை அர்ப்பணித்து செபித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். மொசாம்பிக் மடகாஸ்கர் மற்றும், மொரீஷியஸ் நாடுகளுக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்ட திருத்தூதுப் பயணம் மக்களின் விசுவாசத்தை மேலும் ஆழப்படுத்தியது.

# பெற்றோர் அன்பையும் கருணையையும் பராமரிப்பையுமே எதிர்பார்க்கிறார்கள்

### ஜேர்மன் கேவலார் மடு அன்னையின் பெருவிழாவில் யாழ் ஆயர்





ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் ஏற்பாட்டில் புலம் பெயர் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் மருதமடு அன்னையின் திருநாள் 10 ஓகஸ்ட் 2019 அன்று ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக இயக்குநர் நிரூபன் தார்சீசியஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்பட்டது. ஆயர் தம் மறையுரையில் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் 2019ஆம் ஆண்டை குடும்ப ஆண்டாக பிரகடனப்படுத்தி கொண்டாடி வருகிறது.

கத்தோலிக்க திருச் சபை திருக்குடும்பத்தையே குடும்பங்களின் முன்மாதிரிகையாக தந்துள்ளது. திருக்குடும்பத்தின் தலைவரான சூசையப்பர் மறைந்த வாழ்வு வாழ்ந்தவர். சூசையப்பரைப் பற்றி நற்செய்தி ஏடுகளில் அதிகம் காண முடியவில்லை. புனித சூசையப்பர் கண்ட 5 கனவுகளில் 4 கனவுகள் சூசையப்பர் பற்றி அறிந்து கொள்ள பெரிதும் உதவுகிறது. முதற் கனவில் மரியாள் கருவுற்று இருக்கின்றமையை அறிந்து அவவை நீதி முன் கொண்டு செல்லாமல் மறைவாக விலக்கி விட எண்ணிய போது மரியாளை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்.

இரண்டாவது கனவில் பாலக இயேசுவை பெற்றெடுத்த பின்னர் எகிப்திற்கு குழந்தையுடன் தப்பிச் செல்லுமாறு பணிக்கப்படுகிறார். மூன்றாம் கனவில் ஏரோது இறந்து விட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

நான்காம் கனவில் வேறு இடம் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

இந்த வேளைகளில் எல்லாம் புனித சூசையப்பர் இறை சித்தத்திற்கு கீழ் படிந்தார். பழைய ஏற்பாட்டில் யாக்கோப்புவின் மகன் சூசை கனவுகளுக்கு விளக்கம் கொடுத்தார். புதிய ஏற்பாட்டில் புனித சூசையப்பர் தாம் கண்ட கனவுகளின் அர்த்தம் கண்டு ஏற்றுக் கொண்டார்.

மரியாள் தூய ஆவியால் இறைவனின் தாயாவார் என அறிவிக்கப்பட்டபோது நான் உமது அடிமை உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என பணிந்து இறைவனின் தாயானார்.

கொடுத்த வாக்கிற்காக சிலுவை அடிவரை துன்பத்தை தாங்கி நின்றாள். இயேசு உமக்கு சித்தமானால் இத்துன்பக்கலம் என்னை விட்டு அகலட்டும்.

ஆனால் என் சித்தப்படியல்ல உமது விருப்பப்படியே ஆகட்டும் என துன்பத்தை ஏற்று இறை சித்தத்தை ஏற்றார். திருக்குடும்பம் இறை சித்தத்திற்கு கீழ்ப்படிந்தே இருந்தது என்றார்.

# இன்று குடும்பங்கள் சிதறிப்போய் உள்ளன

### ஜேர்மன் கேவலார் மடு அன்னையின் பெருவிழாவில் வருத்தம் தெரிவித்தார் யாழ் ஆயர்



இன்று பிள்ளைகளை வளர்த்தல் கடினமாகியுள்ளது. பிள்ளைகள் தம் முதிய பெற்றோரை மதிக்காமலும் அன்பு செய்யாமலும் பராமரிக்காமலும் விடுகின்றனர். இன்று பெற்றோர் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் சொகுசு வாகனங்களையும் எதிர்பார்க்கவில்லை. அன்பையும் கருணையையும் பராமரிப்பையுமே எதிர்பார்க்கிறார்கள். முன்பு பெற்றோர் துன்பத்தில் தியாகம் செய்து வாழ்ந்தார்கள்.


பிள்ளைகளை வளர்த்தார்கள். இன்று குடும்பங்களில் தியாகம் இல்லை. திருமணங்கள் இன்று ஒரு வருடம் ஒரு கிழமை இரண்டு நாள் ஒரு நாள் என்றே நீடிக்கிறது. கணவன் மனைவியருக்கிடையில் தியாகம் இல்லை. இன்று இரண்டு பிள்ளைகள் பெறுகின்றனர். முன்பு பெற்றோர் ஏழு பிள்ளைகள் எட்டு பிள்ளைகள் பதினொரு பிள்ளைகள் பன்னிரண்டு பிள்ளைகள் என்று பெற்றெடுத்து மன்றாட்டோடும் தியாகத்தோடும் வளர்த்தார்கள்.

இன்று குடும்பங்களில் பிரமாணிக்கம் இல்லாமல் போய் விட்டது. கணவன் மனைவியரிடையே பிரமாணிக்கம் கேள்விக்குறியாயுள்ளது.

எதற்கும் ஏதோ காரணம் சொல்லி தப்புவதே முயற்சியாயுள்ளது. எல்லாவற்றிற்கும் ஏதோ காரணம் இருக்கிறது. திருக்குடும்பத்தில் இயேசு கீழ்ப்படிதலையும் மரி யாள் பிரமாணிக்கத்தையும் பிறர் அன்புப் பணியையும் கற்பிக்கின்றனர். பிறர் தேவைகளை நிறைவு செய்வதில் மரியாள் கவனமாக இருந்தாள். வயது முதிர்ந்த தனது உறவினரான எலிசபேத்திற்கு பிரசவம் கடினமாக இருக்குமென உணர்ந்து யாரும் கேட்காமலே தான் கர்ப்பமாக இருப்பதையும் பாராமல் உதவி செய்ய விரைகிறார். கானாவூர்த் திருமணத்தில் இரசம் தீர்ந்து விட்டதை அறிந்து யாரும் கேட்காமலே உதவி செய்ய விரைகிறார். தன் மகன் இசேவிடம் விண்ணப்பம் கொடுக்கிறார். அவர் சொன்னபடி செய்யுங்கள் என்று சீடர்களுக்குத் தெரிவிக்கிறார்.

மரியன்னை தேவையை அறிந்து உதவி செய்ய விரைந்து வரும் அன்னை. மரியன்னை எமது தேவையை அறிந்து நாம் கேட்காமலே உதவி செய்ய விரைந்து வரும் ஒரு அன்னை. எமது தேவைகளை அறிந்து நாம் கேட்க முன்னரே மரியன்னை விரைந்து வருவார். பரிந்து பேசி எமது தேவைகளில் எமக்கு துணை புரிவார். நாம் உதவி கேட்க முன்னரே அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என எமக்கு கற்பிப்பார். நாம் அன்னையிடம் கேட்க முன்னரே அன்னை எமது தேவையறிந்து உதவி செய்ய வருவார். நாம் பிறர் கேட்காமலே உதவி செய்ய விரைய வேண்டும். மரியன்னை பிறர் தேவையறிந்து யாரும் கேட்காமலே உதவி செய்ய விரைவார். நாமும் இவ்வாறு பிறர் தேவையறிந்து யாரும் கேட்காமலே உதவி செய்ய விரைய வேண்டும்.

# ஜேர்மனியில் மருதமடு அன்னையின் திருநாள் 1988 ஆம் ஆண்டு முதல்



இலங்கை மண்ணில் இருந்து புலம் பெயர்ந்து ஜரோப்பிய மற்றும் கனடா,அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்ற கத்தோலிக்க மக்கள் தாம் செல்லும் இடமெல்லாம் மருதமடு அன்னை பக்தியை உருவாக்கி வளர்த்து விழாக்கொண்டாடி அவளின் பாதுகாவலில் இருக்கின்றமை சிறப்பானதாகும்.

இலங்கை நாட்டில் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மருதமடு அன்னை இனமத பேதமின்றி தமிழ் கத்தோ லிக்க மக்களையும் சிங்கள கத்தோலிக்க மக்களையும் இந்து மக்களையும் கத்தோலிக்க மக்களையும் இணைக் கின்ற ஒரு பதியாக உள்ளது. இந்த மடு அன்னையின் பக்தி இன்று உலகம் முழுவதும் பரவி வருகிறது.

ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் மருதமடு அன்னையின் திருநாள் திருயாத்திரை 1988 ஆம் ஆண்டு தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தால் ஆரம்பிக்கப்பட்டு முப்பத்தியொரு ஆண்டுகள் நிறைவாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

2019ஆம் ஆண்டு மேற்படி விழா கொண்டாடப்பட்டபோது பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஏறக்குறைய பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து சிறப்பித்தனர் என்பது சிறப்பம்சமாகும்.

# வீழ்ச்சியை நோக்கி அதிபர் புடின்!



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் வீழ்ச்சிக் காலம் தொடங்கிவிட்டது என்றே தோன்றுகிறது. அரசியல் ரீதியாக உள்நாட்டில் எதிர்ப்பு வலுத்து வருகிறது. அவரது செல்வாக்கு வேகமாகச் சரிந்துவருகிறது. இப்போது அவர் எதிர்ப்புகளை அடக்கியாள்வதில்தான் பெரும் அக்கறை காட்டுகிறார்.

எதிர்ப்புகள் வெளியில் தெரியாமலும், எதிர்ப்பாளர்கள் செல்வாக்குப் பெறாமலும் புடின் எவ்வாறு கையாள்கிறார்? வழக்கறிஞர் கரின்னா மாஸ்கலேன்கோ விவரிக்கிறார். தனக்கு எதிராகச் செயல்பட நினைக்கும் அனைத்துத் தொழிலதிபர்களையும் சிறையில் தள்ள வேண்டியது அவசியமில்லை.

மிகவும் பணக்காரரும் சுதந்திர மானவரும் அனைவருடனும் நல்ல தொடர்பில் உள்ளவருமான ஒருவரை மட்டும் சிறையில் தள்ளினால் போதும், மற்றவர்களுக்கு அது எச்சரிக்கையாக அமைந்துவிடும். தன்னைக் கடுமையாக விமர்சிக்கும் எல்லா பத்திரிகையாளர்களையும் ஒடுக்க வேண்டிய அவசியமே இல்லை. தலைசிறந்தவரும், மிகுந்த துணிச்சல் உள்ளவருமான ஒரு பத்திரிகையாளரை ஒடுக்கினால் போதும். மற்றவர்கள் பாடம் படித்துவிடுவார்கள் என்று நம்புகிறார் புடின் என்கிறார் மாஸ்கலேன்கோ. இந்த வியூகம் ஒன்றும் புதுமையானதில்லை. காலங்காலமாக யதேச்சதிகாரிகள் கையாள்வது தான்.

### அராஜக அடக்குமுறை

எதிர்க்கட்சி வரிசையிலேயே மிகவும் முக்கியமானவராக இருந்த போரிஸ் நெம்சோவ் 2015 இல் கொல்லப்பட்டார். அந்தப் படுகொலையின் பின்னணியில் 'கிரெம்ளின்' இருப்பதாகப் பத்திரிகைகள் எழுதின. நெம்சோவுக்குப் பிறகு புடினை எதிர்ப்பதில் முக்கியப் பங்கு வகித்தவர் அலெக்ஸி நவால்னி.

அவர் மீது வெவ்வேறு பொய்யான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு சிறைக்குப் போவதும் வருவதுமாக இருந்தார். அது மட்டுமல்ல; இன்னதென்று இனம் காண முடியாத இரசாயனத் திராவகங்களும் அவர் மீது ஊற்றப்பட்டன. ரஷ்ய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் புடினைக் கடுமையாக விமர்சித்து வந்தவருமான டெனிஸ் வொரனன்கோவ் போன்றவர்கள் அந்நிய நாடுகளின் தலைநகரங்களில் பட்டப்பகலில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்படியான கொலைகள், அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் சிலர் ஜனநாயகத்துக்காக உறுதியாக நிற்பதும் தொடர்கிறது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த லுபோவ் சோபல் குறித்து 'தி நியூயோர்க் டைம்ஸ்' நாளிதழின் மொஸ்கோ நிருபர் ஆண்ட்ரூ ஹிக்கின்ஸ் எழுதியதைப் படிக்கப் படிக்கப் பரபரப்பு நம்மையும் தொற்றிக்கொள்கிறது. 31 வயதான சோபல், மொஸ்கோ நகர வழக்கறிஞர், புடினைக் கடுமையாக விமர்சித்த நவால்னியின் சகா. புடினுக்கு மிகவும் வேண்டியவரான யெவ்ஜெனி பிரிகோஷின் செய்த ஊழல்களை ஒன்றுவிடாமல் ஆராய்ந்து பின் தொடர்ந்தார். 2016 அமெரிக்க அதிபர்தேர்தலில்வாக்காளர்களின்மனங்களைத் திசைதிருப்பும் வகையில் தொடர்ந்து டிரால் செய்ததில் முக்கியப் பங்கு பிரிகோஷினுக்கு உண்டு. பிரிகோஷினின் ஊழல்களைப் புலனாய்வு செய்த செய்தியாளர்கள் பலர் மேலே அனுப்பப்பட்டனர்.

எலியட் நெஸ் போல சோபலும் தனது புலனாய்வில் தீவிரமாக இருந்தவர். நெஸ் கையில் கத்தியுடன் இருந்தார், சோபலிடம் அது இல்லை, துப்பாக்கியும் இல்லை, பேட்ஜும் இல்லை, அவரைக் காக்கச் சட்டமும் இல்லை. ஆனால், எப்போதும் புடினுக்கு எதிரான போராட்டங்களில் அவர் முன் வரிசையில் நிற்கிறார்.

### நிழலுலக நண்பர்கள்

சோபலின் கணவருக்கு விஷம் ஊட்டப்பட்டது. அவரைத் தாக்க வந்தவர்கள் சோபலின் முகத்தில் கறுப்புநிறத் திரவத்தைப் பூசினார்கள். அதை 'பிரமிதியஸ்' என்றும் அழைப்பார்கள். அது நிமிஷத்துக்கு நிமிஷம் தீவிரமாகி இறுதியில் உயிரைப் பறித்துவிடும் இரசாயன நஞ்சு. அதன் பாதிப்பிலிருந்து அவர் மீட்கப்பட்டார். காவல் துறை அவரைப் பெண்ணென்றும் பாராமல் அவருடைய அலுவலகத்திலிருந்து காவல் நிலையத்துக்கு வீதியில் இழுத்து வந்தது. அரசை எதிர்ப்பவர்களை இணங்க வைக்கவோ பணியவைக்கவோ முடியாது என்கிற நிலையில், அவர்கள் கொல்லப்படுகிறார்கள்.

தன்னை எதிர்ப்பவர்களைத் தீர்த்துக்கட்டுமாறு புடின் உத்தரவிட வேண்டிய அவசியம்கூட இல்லை, அவருடைய நிழலுலக நண்பர்கள் தங்களுடைய நண்பரின் நிம்மதிக்காக இதை எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்து முடிப்பார்கள். பலமற்றவர்களைப் பலசாலிகள் அச்சுறுத்துவதைச் சிறு வயது முதலே எதிர்த்து வந்திருக்கிறேன். சிறு வயதிலிருந்தே நேர்மையாக நடக்க வேண்டும் என்று சொல்லி வளர்க்கப்பட்டவள் நான். எனவே, எனக்கு அச்சமில்லை! என்கிறார் சோபல்.

எளிதில் அடங்க மறுக்கும் எதிர்ப்பாளர்கள் மட்டும் சர்வாதிகாரிகளின் வீழ்ச்சிக்குக் காரணமாவதில்லை, சர்வாதிகாரிகளால் கொல்லப்படும் அசாதாரணமான மக்கள் தலைவர்களும், சர்வாதிகாரிகளை வீழ்த்திவிடுவார்கள். தென்னாபிரிக்காவின் ஸ்டீவ் பைகோ, பிலிப்பைன்ஸ் நாட்டின் பெனிக்னோ அகினோ, போலந்தின் ஜெர்சி பொப்பிலுஸ்கோ போன்றவர்களால் சர்வாதிகாரிகள் எப்படி வீழ்ந்தார்கள் என்பதை வரலாறு சொல்கிறது.

### சரியும் செல்வாக்கு


நெம்சோவ் இப்போது கிரெம்ளினை ஆட்டிப் படைத் துக்கொண்டிருக்கிறார். செர்கி மேக்னிட்ஸ்கி, நடாலியா எஸ்டிமிராவா, அலெக்சாண்டர் லிட்வினன்கோ, அன்னா பொலிடிகோவ்ஸ்காயா போன்றோர் புடின் ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்ட அரசியல் எதிரிகள்.

தொடர்ந்து உயர் பதவியில் நீடித்திருக்க புடின் கடைப் பிடிக்கும் உத்தி இதுதான்: அடிவருடிகளுக்குப் பணத்தை அள்ளி வீசு; எதிரிகளுக்குப் பீதியூட்டு; மக்களிடம் 'எதிரிகளால் ஆபத்து' என்ற தேசியவாதப் பிரசாரம்செய்! இவ்வளவுதான். ஆயுள்காலம் முழுக்க ஆட்சியில் இருந்துவிடலாம் என்று நம்புகிறார் புடின்.

ஆனால், சர்வதேச ஒதுக்கல், தொடர்ந்து தேங்கிய நிலையில் உள்ள பொருளாதாரம், மக்களால் விரும்பப்படாத ஓய்வூதியச் சீர்திருத் தங்கள், நம்பகத் தன்மையற்ற வெளிநாட்டுச் சாகசங்கள் என்று ஆட்சிக்கு எதிரான அதிருப்தியும் வெறுப்பும் வளரும் வேகம் மோசமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டன.

முக்கியமான மாற்றம் இளைஞர்களிடம் வெளிப்படுகிறது. ஹொங்கொங்கைப் போல ரஷ்யாவிலும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் இளைஞர்கள்தான் முன்னிலை வகிக்கின்றனர். புடினை நம்பும் இளைஞர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 30% ஆக இருந்தது. இப்போது 19% ஆகச் சரிந்திருக்கிறது. ஆயுள்காலம் முடியும் வரையில் உயர் பதவியில் இருக்க விரும்பும் புடினுக்கு இது நல்ல சகுனம் இல்லை. கடந்த 20 ஆண்டுகளில் இருந்திராத வகையில் முதல் முறையாக புடினின் வீழ்ச்சிக்கு வழிகோலக்கூடிய அனைத்து அம்சங்களும் இணைந்துவருகின்றன. அதில் முக்கியத்துவம் வாய்ந்தது சோபல் போன்ற பெண்களின் வீரம். வாழ்க்கையில் இனிமை எது, பயங்கரம் எது என்று தெரிந்து வைத்திருந்தும், 'வருவது வரட்டும்' என்று அச்சமில்லாமல் விளைவுகளைச் சந்திக்க மக்கள் துணிந்துவிடும்போது வரலாறு மாறுகிறது என்று கிரேக்க அறிஞர் பெரிக்ளஸ் கூறியது நினைவுக்குவருகிறதா? நமக்கு பெரிக்ளஸ் கூறியதை சோபல் நினைவூட்டுகிறார்.

நன்றி- 'தி நியூயார்க் டைம்ஸ்'



"

தொடர்ந்து உயர் பதவியில் நீடித்திருக்க புடின் கடைப் பிடிக்கும் உத்தி இதுதான்: அடிவரு டிகளுக்குப் பணத்தை அள்ளி வீசு; எதிரிகளுக்குப் பீதி யூட்டு; மக்களிடம் 'எதிரிகளால் ஆபத்து' என்ற தேசியவாதப் பிரசாரம்செய்! இவ்வளவு தான். ஆயுள்காலம் முழுக்க ஆட்சியில் இருந்து விடலாம் என்று நம்புகிறார் புடின்.

ஆனால், சர்வதேச ஒதுக்கல், தொடர்ந்து தேங்கிய நிலையில் உள்ள பொருளாதாரம், மக்களால் விரும்பப்படாத ஓய்வூதியச் சீர்திருத் தங்கள், நம்பகத் தன்மையற்ற வெளிநாட்டுச் சாக சங்கள் என்று ஆட்சிக்கு எதிரான அதிருப் தியும் வெறுப்பும் வளரும் வேகம் மோசமான சமிக் ஞைகளை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டன.



# சிமித் மீண்டும் தலைவராவார்

ஆஸ்திரேலிய அணியை சிமித் மீண்டும் வழிநடத்துவார் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் ரெய்லர் நம்பிக்கை தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் பந்தைச் சேதப்படுத்திய சிமித் ஓர் ஆண்டு தடைக்குப் பின்னர் மீண்டும் அணியில் இடம்பிடித்து சிறப்பாக விளையாடி வருகின்றார். நடைபெற்றுவரும் ஆஸ் தொடரிலும் அவர் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அவர் மீண்டும் தலைவராவார் என்றுள்ளார் ரெய்லர்.

சிமித் இன்னும் பல ஆண்டுகள் விளையாடுவார். அடுத்த தடவை தலைமைப் பொறுப்பில் அவர் மிகச் சிறப்பாகச் செயற்படுவார் என்று ரெய்லர் மேலும் குறிப்பிட்டார்.

# விரக்தியில் அக்தர்!

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திலிருந்து இலங்கை அணியைச் சேர்ந்த 10 வீரர்கள் விலகியிருப்பது தமக்கு பெரிய ஏமாற்றத்தை அளிப்பதாக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் வேதனை தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய மாதங்களில் பாகிஸ்தானிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இலங்கை அணி ஒரு நாள் மற்றும் இருபது ஓவர் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

ஆனால் பாதுகாப்பு கருதி இலங்கை அணியை சேர்ந்த 10 வீரர்கள் தொடரில் பங்கேற்கவில்லை என கிரிக்கெட் சபைக்கு கடிதம் அனுப்பினர். அவர்களின் நலனை கருத்தில் கொண்டு கிரிக்கெட் சபையும், விருப்பமுள்ள இளம் கிரிக்கெட் வீரர்களை அனுப்ப முன்வந்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து பாகிஸ்தானை சேர்ந்த அமைச்சர்கள், பிரபலங்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில், பாகிஸ்தான் சுற்றுப்பயணத்திலிருந்து 10 இலங்கை வீரர்கள் விலகியிருக்கின்றமை பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. பாகிஸ்தான் எப்போதும் இலங்கை கிரிக்கெட் வாரியதிற்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் இலங்கையில் நடந்த கொடிய ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு எங்களுடைய 19 வயதுக்குட்பட்ட அணி அங்கு சுற்றுப்பயணத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கு விளையாட தாமாக முன்வந்த முதல் சர்வதேச அணி எங்களுடையது தான்.

அதேபோல 1996 உலகக் கிண்ணத்தை யார் மறக்க முடியும், ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்ய மறுத்துவிட்டன. கொழும்பில் நட்புரீதியான போட்டியில் விளையாட பாகிஸ்தான், இந்தியாவுடன் ஒருங்கிணைந்த அணியை அனுப்பியது. இலங்கையிலிருந்து இந்த பரிமாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இலங்கை கிரிக்கெட் சபை எங்களுக்கு ஒத்துழைக்கிறது. அதேபோல வீரர்களும் ஒத்துழைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.




# பாக். அணியின் தலைவராக சர்பராஸ் அஹ்மட் நீடிப்பார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக சர்பராஸ் அஹ்மட் தொடர்ந்து நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் துடுப்பாட்ட வீரர் மிஸ்பா உல் ஹக்கின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பாகிஸ்தான் அணி, நடைபெற்று முடிந்த கிரிக்கெட் உலகக் கிண்ணத்தில் சிறப்பாக ஜொலிக்காமையினைத்தொடர்ந்து அணித்தலைவர் சர்பராஸ் அஹ்மட் பதவி விலகுவார் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைமை பயிற்சியாளராகவும், சிரேஷ்ட தேர்வாளர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் துடுப்பாட்ட வீரர் மிஸ்பா உல் ஹக்கின் வேண்டுகோளுக்கு அமைய பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக சர்பராஸ் அஹ்மட் தொடர்ந்து நீடிப்பார் என கூறப்படுகின்றது.


இதற்கமைய இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரில் அணித்தலைவராக சர்பராஸ் அஹமட் செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாகிஸ்தான் அணியின் உப தலைவர் பொறுப்பு இளம் துடுப்பாட்ட வீரரான பாபர் அசாமிற்கு வழங்கப்பட்டுள்ளது.



## தெற்காசிய விளையாட்டுப் போட்டி;

# பளு தூக்கலில் இலங்கையின் சார்பில் களமிறங்கும் முதல் தமிழ் வீராங்கனை



தெற்காசிய விளையாட்டு விழா போட்டி வரலாற்றில் இலங்கை சார்பாக பளுதூக்கல் போட்டியில் பங்கேற்கவுள்ள முதல் தமிழ் வீராங்கனையாக விஜயபாஸ்கர் ஆர்ஷிகா இடம்பெறவுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நேபாளத்தில் தெற்காசிய விளையாட்டு விழா ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்ஷிகா தனது 13 ஆவது வயதில் பளுதூக்கல் விளையாட்டை ஆரம்பித்தார். இவருக்கு தந்தையே பயிற்றுநராகச் செயற்பட்டு வருகின்றார்.

2014ஆம் ஆண்டில் தனது 13 ஆவது வயதில் பாடசாலை மட்ட பளுதூக்கல் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற ஆர்ஷிகா, அன்று முதல் பாடசாலை மட்ட சகல போட்டிகளிலும் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார். கனிஷ்ட பிரிவில் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 4 தங்கப் பதக்கங்களையும், சிரேஷ்ட பிரிவில் 3 வெள்ளி, 2 தங்கப் பதக்கங்களையும் ஆர்ஷிகா வென்றுள்ளார். அகில இலங்கை பாடசாலைகள் மட்ட 20 வயதிற்குட்பட்ட மகளிருக்கான பளு தூக்கல் போட்டிகளில் மூன்று தேசிய சாதனைகளுடன் வெற்றியீட்டியவர்.

இப்படி பல சாதனைகளை படைத்துள்ள ஆர்ஷிகா, தெற்காசிய போட்டிகளிலும் சாதிப்பார் என்ற நம்பிக்கையுள்ளது. (ஐ)

northern PC Park

வடக்கின் கணினிப் பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்

www.pcpark.co info.pcpark.co

Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park

0777570124 0215675566
0773366443 0212229581
0766999597 0212222050
0717772377 0212220388

## மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!



# திலீபன் சொன்னதை மறக்காமல் ஒருமித்து செயற்படுவோம் வாரீர்!



இந்த உலகத்தில் எத்தனையோ தியாகிகள் தோன்றியிருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோரிக்கைகளுக்காக எதை எதை எல்லாமோ தியாகம் செய்திருக்கலாம். ஆனால் தனது சமூகத்திற்காக தனது இனத்தின் விடிவுக்காக உயிரையே தியாகம் செய்தவர்கள் ஒரு சிலர் மட்டுமே. அப்படிப் பட்ட தியாகங்களை உலகம் என்றும் போற்றி நிற்கின்றது. ஆனால் ஈழ நாட்டிலே தனது இனத்தின் விடுதலைக்கு தன் உயிரை தியாகம் செய்த ஓர் இளைஞனை ஏன் இந்த உலகம் கண்டு கொள்ளவில்லை.

உலக வரலாற்றிலே போற்றப்பட வேண்டிய திலீபனின் தியாகம் பயங்கரவாதம் என்று நோக்கப்படுவது வேடிக்கையோடு வேதனையான ஒன்று. சரி யார் இந்த திலீபன் எதற்காக இவன் தன் உயிரையே தியாகம் செய்தான் என்பதை இன்றைய இளையசமுதாயம் அறிந்திருக்குமா என்பது சந்தேகமே. எனவே அவர்களுக்காக அந்த தியாக தீபத்தின் சிறப்பினை இங்கே தெளிவுபடுத்த வேண்டும். யாழ்ப்பாணம் ஊரெழுவிலே பிறந்த இவரது பெயர் இராசையா பார்த்தீபன். கார்த்திகை 27.1963 இல் பிறந்த பார்த்தீபன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்ப கால முக்கிய உறுப்பினராக செயற்பட்டவர். யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராகச் செயற்பட்டவர்.

1987 புரட்டாதி 15 ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையினை இந்திய ஆக்கிரமிப்பு படைகளிடம் அவர்கள் கூறும் காந்தியின் வழியிலே நீரும் அருந்தா உண்ணா விரதம் இருந்து தனது உயிரையே தியாகம் செய்தவர். அகிம்சை ரீதியான போராட்டங்களில் துளி அளவு நம்பிக்கை கூட இல்லாது. ஈழத் தமிழர்களை ஆயுத பிரியர்களாக மாற்றியதோடு மட்டும் அல்லாது இந்திய வல்லாதிக்க இராணுவத்திற்கெதிராக தமிழர்களை கள முனை நோக்கி நகர்த்தியதும் இந்த திலீபனின் இழப்பே. தனது வாழ்விலே எந்த ஒரு சந்தோசத்தையும் அனுபவிக்காத வெறும் இருபத்து நான்கு வயதான அந்த இளம் தளிர் பட்டினியால் கருகிப் போனதை எளிதில் மறக்குமா தமிழினம் .

எனவேதான் அதற்கான பல விளை வுகளை இந்திய வல்லாதிக்க இராணுவம் சந்திக்க நேர்ந்தது. அமைதிப்படை என்ற பெயரிலே தமிழர் தாயகங்களை ஆக்கிரமிப்பு செய்த இந்தியாவின் கொடிய ராணுவம் இன்று வரை மறந்திருக்காது ஈழ மண்ணிலே ஒரு சிறிய போராட்ட குழுவிடம் வாங்கிய அடிகளை.

இது போலவே இந்த தியாக தீபத்தின் இழப்பிற்கும் இந்தியாவே முழு பொறுப்பும். சுருக்கமாக கூறப் போனால் திலீபனை இந்தியா கொலை செய்தது என்றே கூறலாம். அவனது நியாயமான கோரிக்கைகளை இந்தியா நிறைவேற்றி இருந்தால் வாழ வேண்டிய அந்த இளம் தளிர் பட்டினித்தீயிலே பொசுங்கியிருக்காது அப்படி அவன் எதை கேட்டான். அவனது ஐந்து கோரிக்கைகளை அன்று நிறைவேற்ற முடியாத காரணம் என்ன?

மீள் குடியேற்றம் என்ற பெயரிலே வடக்கு

**தியாகதீபம் திலீபனின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகின்றன. அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியாகிறது.**

கிழக்கில் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். அவசரகால சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். ஊர்காவல்படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாக களையப்பட வேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஐந்து கோரிக்கையே ஆகும். ஆனால் இன்று வரை அந்த தியாக திலீபன் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. காந்திய தேசத்திடம் காந்திய வழியிலே போராடி தோற்றுப்போனது திலீபனது அகிம்சை. இதற்காக இந்தியா இது வரை சிறு வருத்தமோ ஆதங்கமோ காட்டிக்கொள்ளவில்லை. மாறாக அவனை தீவிரவாதியாகவும் வன் முறையாளனாகவுமே சித்திரிக்கின்றது.

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலே பெரும் சோகத்தினையும் ஈழ விடுதலைப்போராட்டத்தின் பேரெழுச்சிக்கும் முக்கியமான ஒரு காரணியாகவும் அமைந்தது திலீபனின் இழப்பு. அகிம்சை ரீதியாக போராடினால் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம் என்றும் உலகத்தில் அகிம்சைதான் சிறந்த ஓர் ஆயுதம் என்றும் வரையப்பட்ட வசனம் நல்லூரான் வீதியிலே பொய்யாகிப்போனது.

உணவின்றி நீரின்றி வாடிப்போன அந்த இளைஞனை உலகத்துக்கு அகிம்சையினை போதிக்கும்எந்தஆசானும்கண்டுகொள்ளவில்லை. அணுகுண்டையும் ஆட்லறியையும் கைகளில் வைத்துக்கொண்டு அகிம்சை பேசும் ஆசாமிகளும் காந்தியதேசம் என்றும் புத்தன் பிறந்த பூமி என்றும் புனிதம் பேசும் இந்தியாவும் பார்த்துக்கொண்டிருக்க பறிக்கப்பட்டது எங்கள் பார்த்தீபனின் உயிர். எல்லோரும் இன்புற்றிருப்பதை தவிர வேறென்றும் அறியேன் என்ற தமிழனின் பிள்ளை பட்டினித்தீயிலே கருகிப் போனது

வன்முறைவேண்டாம் ஆயுதக்கலாசாரம் வேண்டாம் எங்கும் அமைதி அமைதி என்று பகட்டுவித்தை காட்டும் மனிதர்கள் அன்று அகிம்சை ரீதியாக தன் இனத்திற்கு நீதிகேட்டு தவம் இருந்த திலீபனை கண்டுகொள்ளவில்லை. காரணம் என்ன? ஆடைகளுக்குள் ஆயுதங்களை மறைத்துவைத்து அகிம்சைபேசும் போலி மனிதர்களை நம்பி திலீபனை பலிகொடுத்தது ஈழத்தமிழினம். மிகப்பெரிய தியாகத்தை செய்த தியாக திலீ பனின் தியாகம் உலகத்தின் அத்தனை தியாகங்களையும் விட பெரியது. பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிது. இந்த நூற்றாண்டின் அகிம்சாவாதியாக சமாதானத்தின் தந்தையாக போற்றப்படும் நெல்சன் மண்டேலா இருபத்தேழு ஆண்டுகள் சிறையிலே தனது வாழ் நாள்களை தியாகம் செய்திருந்தார். அவரது எண்ணம் நிறை வேறியிருந்தது.

ஆனால் திலீபனின் கோரிக்கைகள் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அவனது தியாகத்துக்கான பலன் கிடைக்கவில்லையே?

எம் இனத்தின் விடியலுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய பல்லாயிரம் வீரர்கள் பிறந்த இந்த மண்ணிலே விடுதலைக்கு வித்தாகி வீழ்ந்த உடல்கள் எத்தனை? எப்படி எல்லாம் போராடமுடியுமோ அப்படி எல்லாம் போராடிவிட்டோம். ஆனால் நீதியும் நியாயமும் எமக்கு கிடைப்பதாக இல்லை இனியும் என்னசெய்யப் போகின்றோம்?.

மரணப்படுக்கையிலே திலீபன் சொன்னது போல மக்கள் புரட்சி ஒன்று வெடிக்கட்டும். ஒன்று பட்ட தமிழ்ச்சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிக்காவிடின் ஒட்டுமொத்த தமிழினத்தின் குரல்வளையினை சிங்களப் பேரினவாதம் நசுக்கிவிடும். சுயநலமற்ற மனிதர்களாக மண் ணிலே வாழும் வரை சுயமரியாதையுடன் வாழ சுதந்திரக்காற்றினை சுவாசிக்க எல்லோரும் ஒன்றுபடுவோம். தீயாக தீபத்தின் அந்த ஒப்பற்ற வீரனின் நினைவினை சுமந்து நிற்கும் இந்த நாளிலே அவன் கோரிக்கைகளை நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவோம்! ★






# ‘எழுக தமிழ்’ எழுச்சிப் பேரணியில் பங்கேற்று நாம் வரலாற்றுக் கடமையைச் செய்திடுவோம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி வாழ்த்தும் ஆதரவும்



தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழ் மக்களின் பெருந்தலைவர்களான தந்தை செல்வா, பெரியார் ஜீ ஜீ பொன்னம்பலம் ஆகியோரால் தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்டதாகும். அந்த முயற்சியில் பெரும் வெற்றியும் கண்டது. துரதிஷ்டவசமாக அந்த ஒற்றுமை தற்போது சீர்குலைந்திருந்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கைகளில் எதுவித மாற்றமும் இன்றி செயற்படுகிறது.

இன்று நாட்டு நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிற இந்நிலையிலேயே தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை உணர்வைத் தூண்டுவதற்கு சில கோரிக்கைகளை முன்வைத்து எழுக தமிழ் நிகழ்வு நடத்தப்படுகிறது!

இதற்கு தமிழ் மக்கள் அனைவரும் பூரண ஆதரவை வழங்கி அதில் கலந்துகொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகிறது!

இவ் ஒற்றுமையின் அவசியத்தை நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பவமும் எமக்கு உணர வைக்கிறது. கொக்கட்டிச்சோலைக்கு பாதயாத்திரை மேற்கொண்டவர்களை பொலிஸார் கன்னியா வெந்நீர் ஊற்றில் நீராடவிடாத செயல் அரசினுடைய அனுசரணையுடனேயே நடந்திருக்கிறது என நான் சந்தேகப்படுகிறேன்.

எழுக தமிழ் மூலம் தமிழரின் ஒற்றுமை ஓங்கி வளரட்டும் என வாழ்த்துகின்றேன் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். (இ

## தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையும் அழைப்பு

எழுகதமிழ் நிகழ்வுக்கு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை பூரண ஆதரவை வழங்குவதுடன் அனைத்து தமிழ் மக்களையும் கலந்துகொள்ளுமாறு பகிரங்க அழைப்பையும் விடுத்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவையால் நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவிருக்கும் எழுக தமிழ் – 2019 வரலாற்று நிகழ்வுக்கு தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை கடந்த கால எழுக தமிழ் நிகழ்வுகளுக்கு பூரணமான ஆதரவை வழங்கியது போல் இம்முறையும் பலமான ஆதரவை வழங்க உத்தேசித்துள்ளதுடன் வடகிழக்கு தமிழர் தாயக தமிழ் மக்கள் அனைவரையும் இவ் நிகழ்வில் கலந்து உங்கள் ஒவ்வொருவரினதும் தமிழ் தேசிய வரலாற்று தார்மீக உரிமையை நிலைநாட்டுமாறு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை பகிரங்க அழைப்பை ஏற்படுத்துகின்றோம்.

இன்று எமது தாயக மக்கள் எதிர்நோக்கியுள்ள அனைத்து பிரச்சினைகளையும் எமது எதிர்கால அரசியல் திட்டங்களுக்கு ஊடாகவும் சர்வதேசத்தின் ஆதரவுகள் மற்றும் இலங்கை அரசு மீதான அழுத்தங்களுக்கு ஊடாகவும் எமது போராட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் பல கோரிக்கைகளை முன்வைத்து நாளை திங்கட்கிழமை காலை 09.00மணிக்கு யாழ் முற்றவெளியில் இவ் எழுக தமிழ் நிகழ்வை தமிழ் மக்கள் பேரவை ஒழுங்குபடுத்தியுள்ளது. ஆகவே இவ்வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வுக்கு அனைத்து மக்களும், அனைத்து கட்சிகளும், பல்கலைக்கழகம் உட்பட ஏனைய கல்விசார் நிறுவனங்களும், வர்த்தக சங்கங்களும் ஏனைய பொது அமைப்புக்களும் தங்களது பூரண ஆதரவுகளை வழங்கி எமது தார்மீக கடமையை நிறைவேற்ற ஒன்றிணைவோம் என்று தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க.ஜெனனன் அழைப்பு விடுத்துள்ளார். (இ

## யாழ், மறைமாவட்ட குரு முதல்வரின் அறிக்கை



நாளை திங்கட்கிழமை தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படும் எழுக தமிழ் நிகழ்வு சிறப்புறவும் இதன்மூலம் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷையாகிய மாண்புடன் கூடிய சுதந்திர வாழ்வுக்கு இந்நிகழ்வு வழிசமைக்கவும் இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்.

கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களாகிய நாம் எமது விடிவுக்காக பல்வேறு வடிவங்களில் பல்வேறு அமைப்புக்களாக பல தியாகங்கள், அர்ப்பணிப்புக்களோடும், இதயசுத்தியோடும் போராடி வந்திருக்கின்றோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும், இத்தனை முயற்சிகள் மத்தியிலும் நாம் முழுமையான வெற்றியோ, திருப்தியோ காணமுடியவில்லை என்ற உண்மைக்கான அடிப்படையான காரணம் நாம் எப்பொழுதுமே ஒரே தமிழ் இனமாக இவற்றை மேற்கொள்ளவில்லை என்பதேயாகும். நாமாக எமக்குள்ளே ஏற்படுத்திக்கொண்ட பேதங்களை, பிரிவினைகளை பலர் பயன்படுத்தியதே எமது பின்னடைவுகளுக்கான முக்கிய காரணமாகும்.

எனவே, தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படும் இந்நிகழ்வுக்கு அனைவரும் தங்கள் ஆதரவை நல்கவேண்டுமென்றும் நாம் ஒன்றுபட்ட தமிழ் இனம் என்பதை உலகெங்கும் பறைசாற்றும் நிகழ்வாக இந்நிகழ்வு மிளிர ஒத்துழைக்க வேண்டுமென்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எவ்வித தனிப்பட்ட ஆதாயத்தையும் தேடாமல் தமிழ் மக்களின் மாண்புடன் கூடிய விடுதலை வாழ்வையே ஒரே நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்நிகழ்வு தமிழ் எழுச்சியுற வழிசமைப்பதாக.

**அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம்**
**குரு முதல்வர்**
**யாழ்ப்பாணம் மறைமாவட்டம்**

---

தமிழர்களது அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கியதான தீர்வுத்திட்ட யோசனைகளை முன்னிறுத்தியும் தமிழ் மக்களது சமகால போராட்ட முன்னெடுப்புகளில் வலியுறுத்தப்பட்டுவரும் கோரிக்கைகளுக்கு கூட்டுப்பலம் சேர்க்கும்வகையிலும் தமிழ் மக்கள் பேரவையால் நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவிருக்கும் எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை முழுமையான ஆதரவினை வழங்குவதுடன் இம்மக்கள் எழுச்சிப் பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளித்து பங்கேற்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் வகையிலான சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புகளும் அத்துமீறல்களும் எதேச்சதிகாரப்போக்கும் வரைமுறைகளேதுமின்றி தமிழர் தாயகத்தில் முழுவீச்சுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவையெதையுமே கண்டும் காணாதவர்களாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் செயற்பட்டுவருகின்றமை மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக தமிழ் மக்களை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறான கையறு நிலையில்தான் தமிழ் மக்கள் தாமாகவே தத்தமது பிரச்சினைகளை முன்வைத்து தனித்தும் கூட்டாகவும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களாகட்டும், சட்டவிரோதமான முறையில் சிறையிலடைக்கப்பட்டவர்களாகட்டும் அவரவரது தனித்தான நலன்களுக்காக துன்பச்சிலுவை சுமக்கவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வல்வளைப்புச் செய்யப்பட்டிருக்கும் தமிழர்களது பாரம்பரிய இடங்கள் அந்தந்த காணி உரிமையாளர்களுடனான தனிப்பட்ட பிணக்குகளின்பாற்பட்டு ஆக்கிரமிக்கபட்டவில்லை. இவ்வாறானவை அனைத்தும் தமிழர்கள் என்பதற்காகவே எம்மவர்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களாகிய நாம் அனைவரும் உலகின் எந்தவொரு மூலையில் இருந்தாலும் தாயகத்தில் நடைபெறவிருக்கும் எழுக தமிழ் 2019 எழுச்சிப் பேரணிக்கு ஆதரவளிப்பது வரலாற்றுக்கடமையாகும். குறிப்பாக தாயகத்தில் இருக்கும் தமிழ்தேசிய அரசியலை முன்னெடுக்கும் அனைத்து தரப்பினரும் அரசியல், கட்சி வேறுபாடுகள் கடந்து ஓரணியில் அணிதிரள வேண்டும். ஐமப்தாயிரத்திற்கு மேற்பட்ட மானமறவர்கள் எதற்காக தம்முயிரைத் தியாகம் செய்தார்களோ அத்தியாகத்தினை அர்த்தமுள்ளதாக்கும் அனைத்து முன்னெடுப்புகளிலும் பங்கேற்பது தமிழர்களாகிய அனைவரது கடனாகும்.

தாய் மண் விடுதலை பெறவும், வருங்கால சந்ததி சுதந்திரக்காற்றை சுவாசிக்கவுமாக முகம் தெரியாமல் தம்முயிரதுறந்த தியாகசீலர்களது தியாகத்திற்கு முன்பாகவும், கந்தகம் சுமந்து காலனை வென்று சாவினை விரும்பியழைத்து வெடித்துச்சிதறி வானோடு வானாகவும், கடலோடு கடலாகவும், காற்றோடு காற்றாகவும், மண்ணோடு மண்ணாகவும் கலந்துவிட்ட கருவேங்கைகளின் சிதறுண்டுபோன சதைத்துண்டங்களுக்கு முன்பாகவும் எம்மைப் பிரித்தாளும் தன்முனைப்பு, விடாக்கொண்டன் கொடாக்கொண்டன் போக்கு என்பன கால்தூசாகும்.

எமது வரலாற்றை மனதில் நிறுத்தி தமிழ் தேசத்தின் விடிவிற்காகவும் தமிழ் மக்களின் இருப்பிற்காகவும் கொள்கைவழி ஒன்றுபட்ட பெரும் சக்தியாக தமிழ்த் தேசிய அரசியல் வழியே பயணித்து வரும் அனைத்து தரப்புகளும் எழுக தமிழராய் அணிதிரளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். – என்று அனைத்துல ஈழத்தமிழர் மக்களவையின் அறிக்கை குறிப்பிடுகின்றது. (இ






வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வட்டார உறுப்பினர்கள் சபையில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக வருடாந்த வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.
அந்தவகையில் உக்கிளாங்குளம், கூமாங்குளம், தோணிக்கல், எல்லப்பர் மருதங்குளம் ஆகிய கிராமங்களின் வீதிகளின் புனரமைப்பே முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனை பிரதேச சபை தவிசாளர் து.நடராஜ சிங்கம் மற்றும் வட்டார உறுப்பினர்கள் கண்காணித்து வருகின்றனர்.
(இ – 100)








தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்திய முழுநிலா நாள் கலை விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1.30 மணி வரை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் சிறப்புற இடம் பெற்றது.
தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள அழகியல் பாட வளவாளர் மதிவாணி விக்னராஜாவும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந. சர்வேஸ்வரன் வரவேற்புரை ஆற்றினார். வலய முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பிரேமதாஸ் நன்றியுரை ஆற்றினார்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற வரணி மண்ணின் மைந்தர் பேராசிரியர் செ. சந்திரசேகரம் கௌரவிக்கப்பட்டார். தமிழ்ப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே. உதயகுமார் கௌரவிப்பிற்கான முன்வைப்பை மேற்கொண்டார்.
தென்மராட்சியின் முன்னணிப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகள் காண்போரைக் களிப்புறச் செய்யும் வகையில் மேடையேற்றப்பட்டன.
வடமாகாணக் கல்வித் திணைக்களம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுத்து வரும் முழுநிலா நாள் நிகழ்வுகளில் ஆவணி மாதத்திற்குரிய நிகழ்வுகள் தென்மராட்சி கல்வி வலயத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.
(ஐ)





இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் உயரிய வேலைத் திட்டத்தில் **vision of love (uk)** அனுசரணையுடன் 23 விஜயபாகு காலாட்படைப் பிரிவு உழைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமளங்குளம் கிராம மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டது
இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் சுமார் 17 இலட்சம் ரூபா மூலப்பொருள் செலவில் கட்டுமான வேலைகள் அனைத்தும் இராணுவத்தினரால் செய்யப்பட்டு குறித்த குடிதண்ணீர் திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது
23ஆவது விஜயபாகு காவல்படை பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 64ஆவது படைப்பிரிவின் இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் கீர்த்தி கொஸ்தா, இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் தலைவர் விக்னராஜ் மனோகரன், தேசிய சேவைகள் இணைப்பாளர் குலேந்திரன் சிவராம், தேசிய ஊடக இணைப்பாளர் மகேஸ்வரன் சஞ்சீவன், வவுனியா சத்திய சாயி நிறுவனத்தின் தலைவர் குமாரசாமி சிவகுமாரன், தண்ணீரூற்று சத்திய சாயி நிறுவனத்தின் தலைவர் சின்னத்தம்பி நவரட்ணம் உள்ளிட்ட நிறுவன உத்தியோகத்தர்கள் ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இராமதாஸ் இரமேஷ் உள்ளிட்ட அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு மக்களுக்கான குடிதண்ணீர் திட்டத்தை மக்களிடம் கையளித்தனர்
(இ



# கோட்டாபய ராஜபக்ஷ ஒரு போர்க்குற்றவாளி!

## அனுரகுமார பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 15

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ போர்க்குற்றவாளி. அவருக்கு அடிப்படை அரசியல்கூடத் தெரியாது என்று தேசிய மக்கள் சக்தியின் அரச ஜனாதிபதி வேட்பாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான தமிழ், முஸ்லிம் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கமாட்டார்கள். சிங்கள மக்களிலும் பலர் அவருக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். ஒட்டுமொத்தத்தில் 30 வீத வாக்குகளைக்கூட அவர் பெறமாட்டார். அதே வேளை, பாரிய ஊழல், மோசடிகளை அரங்கேற்றி நாட்டின் பொருளாதாரத்தைப் படுபாதாளத்துக்குக் கொண்டு சென்ற ஐக்கிய தேசியக் கட்சி களமிறக்கவுள்ள வேட்பாளரும் 30 வீத வாக்குகளைப் பெறமாட்டார்.

ராஜபக்ஷ குடும்பம் இந்த நாட்டில் மீண்டும் சர்வாதிகார ஆட்சி நடத்தவே கோட்டாபயவை வேட்பாளராகக் களமிறக்கியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கோட்டாபய பதவி வகித்த காலத்தில் அவர் செய்த கொடூரங்களை – அட்டூழியங்களைத் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் மறக்கமாட்டார்கள்.

கோட்டாபய எந்த முகத்துடன் வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார் என்று எமக்குத் தெரியவில்லை. தேர்தலில் அவருக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுமெனில் மூவின மக்களும் எனக்கு வாக்களிக்க வேண்டும். நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் தீர்க்கமான முடிவு எடுத்து வாக்களிக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி'யின் ஆட்சி இந்த நாட்டில் மலர்ந்தால்தான் மூவின மக்களுக்கும் நிம்மதி கிடைக்கும் – என்றார். (ஐ)



### படையினர் வசமுள்ள

## காணிகள் விடுவிப்பு தொடர்பில் யாழ். செயலகத்தில் கலந்துரையாடல்







யாழ்ப்பாணம், செப். 15

யாழ் மாவட்டத்தில் முப்படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பிலான கலந்துரையாடலொன்று யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் இராகவன் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், இராணுவத்தினர், பொலிஸார், கடற்படையினர் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது யாழ் மாவட்டத்தில் முப்படைகளின் வசம் உள்ள பொது மக்களின் காணிகள் குறித்தும் விடுவிப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.09.2019 இல் வெளியிடப்பெற்றது.

# எழுக தமிழ் நிகழ்வு நாளை யாழில்

## ஏற்பாட்டு ஒழுங்குகள் அறிவிப்பு

முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைக்கப்பட்ட தமிழர் உடல்களோடு உடலாக, அனைத்துலக மனித உரிமை கோட்பாடுகளையும், வரையறைகளையும், நியமங்களையும், நம்பிக்கையினையும் சேர்த்தே புதைக்கபட்டு விட்டதை இன்றளவும் மெய்ப்பிப்பதாகவே தமிழினப் படுகொலைக்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

போர் வலயத்தில் இருந்து தமிழ் மக்களை வெளியேற்ற வேண்டும் என்று குரல் கொடுத்த சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் நீதியைப் பெற்றுத் தருவதில் கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாது இருக்கின்றமையானது, தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பானது என்ற கூற்றின் வழியே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கான நீதியானது அனைத்துலக நாடுகளின் அரசியல், பொருளாதார, இராஜதந்திர நலன்களை முன்னிறுத்தி தாமதிக்கப்பட்டு வருவதன் வெளிப்பாடே யாகும்.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் கேந்திரமாக அமையப்பெற்ற புவிசார் முக்கியத்துவத்தினை தமக்கு சாதகமாக்கி அனைத்துலக சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டுள்ளதோடு தமிழர்கள் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பை முழுவீச்சில் முன்னெடுத்து வரும் சிறீலங்கா அரசிற்கு மேற்கூறப்பட்ட புறநிலையானது மென்மேலும் ஊக்கத்தையே கொடுத்து வருகின்றது.

இவ் நச்சு வட்டத்திலிருந்து எமக்கான நீதியை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தமிழர்களாகிய நாம் தேசமாக அணிதிரண்டு ஒருமித்த குரலில் ஓங்கி ஒலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை நன்குணர்ந்தே தமிழ் மக்கள் பேரவை 'எழுக தமிழ் – 2019' எழுச்சிப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது. தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்திருந்த காலத்தைவிடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் இன்று மிகப் பெரியதாகியுள்ளமையே இவ் எழுக தமிழுக்கான கதவினைத் திறந்துள்ளது.

சரியான நேரத்தில் மிகச்சரியான முனைப்பாக தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படவிருக்கும் 'எழுக தமிழ் – 2019' எழுச்சிப் பேரணி அமைந்துள்ளதென்பதை, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து மற்றும் தமிழ்நாடு என தமிழர் பெரும்பரப்பில், யாழ் மண்ணில் நடைபெறும் சமகாலத்திலேயே 'எழுக தமிழ்' எனும் பெயரிலேயே ஆதரவுப் பேரணிகள் நடாத்தப்படவிருக்கின்றமை மீள உறுதிசெய்து நிற்கின்றது. அத்துடன் ஜெனீவாவிலும் இனப்படுகொலைக்கான நீதி கோரி மாபெரும் எழுச்சிப் பேரணி செப்ரெம்பர் 16 அன்று நடைபெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தாயகத்தில் வெளிப்படும் எழுகையானது தமிழர் பெரும்பரப்பில் மேற்கொள்ளப்படும் நீதிக்கான முன்னெடுப்புகளுக்கு பலம்சேர்ப்பதாக அமையும் என்பதனை இவ் எழுக தமிழ் மீண்டும் எடுத்தியம்பியுள்ளது. அந்த வகையில் வடக்கு கிழக்கு தழுவி தேசமாக தமிழர்கள் அணிதிரளும் எழுக தமிழ் – 2019 எழுச்சிப் பேரணியானது தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு முன்னகர்த்திச் செல்லும் என்ற அடிப்படையில் மாபெரும் எழுச்சி பிரவாகமாக இவ் எழுகதமிழை மேற்கொள்வதற்கான பூரண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தழுவியதாக தமிழர் தாயகமெங்கும் எழுக தமிழுக்கான ஆதரவு பல்வேறு தளங்களில் இருந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ் ஆதரவுத்தளத்தினை ஒருங்கிணைத்து எழுக தமிழை பேரெழுச்சியுடன் முன்னெடுக்க ஏதுவாக வடக்கு கிழக்கு தழுவியதான பூரண கதவடைப்பிற்கு எம்மால் அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் கடற்றொழிலாளர்கள் பங்கேற்கும் வகையில் அன்றைய தினத்தில் தொழில் நிறுத்தம் செய்யுமாறு சம்மேளனத்தின் சார்பில் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து சேவைகளும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியுள்ளன.

தாயகம் தழுவியதாக வருகையினை உறுதிசெய்திருக்கும் அமைப்புகளிற்கான வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. தன்னெழுச்சியாக வருபவர்களையும் எழுக தமிழ் நிகழ்வில் பங்கேற்கச் செய்யும் வகையில் பொதுவான போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இனமான உணர்வுடன் தமிழர்கள் அனைவரும் எழுக தமிழ் நிகழ்விற்கு அலைகடலென திரண்டு வருமாறு உரிமையுடன் அழைப்பு விடுக்கின்றோம்.

கீழ்வரும் மக்கள் அமைப்பினர் எழுக தமிழ் – 2019 இற்கு தமது பூரண ஆதரவினை வழங்கியுள்ளார்கள்.

★ யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்
★ யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம்
★ யாழ் பல்கலைக் கழக ஊழியர் சங்கம்
★ கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்
★ மன்னார் பிரஜைகள் குழு
★ தமிழர் மரபுரிமைப் பேரவை
★ தென் கயிலை ஆதீனம் – குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார்
★ யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம்
★ நல்லை ஆதீனம் – குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
★ யாழ். சின்மயா மின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி சிதாகாசானந்தா
★ சர்வதேச இந்து குருமார்கள் ஒன்றியம் – வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்
★ செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் – ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
★ மட்டக்களப்பு மாவட்ட இந்து மத குருமார்கள் ஒன்றியம்
★ மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகம்
★ ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
★ வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்
★ வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்
★ யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்
★ கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம்
★ மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ பளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ கண்டாவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ யாழ்ப்பாண பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ ஊர்காவற்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ காரைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ வேலனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ வலிகாமம் தென் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
★ இச்சமாசங்களுக்குட்பட்ட 150 இற்கு மேற்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
★ யாழ் பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்
★ அச்சுவேலி சிற்றூர்திகள் சேவை சங்கம்
★ வடமராட்சி சிற்றூர்திகள் சேவை சங்கம்
★ வவுனியா மாவட்ட பொது அமைப்புகள்
★ மன்னார் மாவட்ட பொது அமைப்புகள்
★ சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
★ வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழு
★ யாழ் – மாதகல்(787) சிற்றூர்திகள் சேவை சங்கம்
★ மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனம்
★ மன்னார் சமூக வளர்ச்சியின் மாற்றம் அமைப்பு
★ வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட RDS மற்றும் WRDS சமாசம்
★ யாழ் சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
★ வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
★ தென்மராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
★ மன்னார் நகர வர்த்தக சங்கம்
★ கிளிநொச்சி வர்த்தக சங்கம்
★ வவுனியா வர்த்தக சங்கம்
★ யாழ் வணிகர் கழகம்
★ நெல்லியடி வர்த்தக சங்கம்
★ பருத்தித்துறை வர்த்தக சங்கம்
★ கொடிகாமம் வர்த்தக சங்கம்
★ சாவகச்சேரி வர்த்தக சங்கம்
★ சுன்னாகம் வர்த்தக சங்கம்
★ சங்கானை வர்த்தக சங்கம்
★ மானிப்பாய் வர்த்தக சங்கம்
★ யாழ் மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம்




★ நெல்லியடி சந்தை வியாபாரிகள்
★ திருநெல்வேலி சந்தை வியாபாரிகள்
★ தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்

இவற்றுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கங்கள், மாதர் சங்கங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சமூகமட்ட அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகிய தரப்பினர் எழுக தமிழ் – 2019 நிகழ்விற்கு தமது ஆதரவினை வழங்கியுள்ளார்கள். அத்துடன் தாய்த்தமிழ் நாட்டில் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் முழுமையான ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தமிழர் தாயகத்தில் இருந்து செயற்படுகின்ற தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தையும், எழுக தமிழ் கோசங்களையும் ஏற்றுக் கொண்ட பெரும்பாலான கட்சிகளும் தமது பூரண ஆதரவினை தெரிவித்துள்ளன.

**வாகன ஒழுங்குகள் தொடர்பான விபரங்கள்.**

மன்னார் – ராஜா 0767089338
வவுனியா – சிறிதரன் 0777908617
வடமராட்சி – சிவகுமார் 0774521392
வடமராட்சி கிழக்கு – காண்டீபன் 0761660414
வலிகாமம் – சரவணன் 0777243129
வலிகாமம் கிழக்கு – உதயகுமார் 0773024487
ஏனைய இடங்களுக்கு மேலதிக விபரங்களுக்கும் – 0760025080

**போக்குவரத்து சேவையின் நேரங்களும் வழித்தடங் களும்**

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து (750 வழித்தடத்தில்)
காலை 7.30 மணி
காலை 8.00 மணி
தொடர்பிற்கு – சிவகுமார் 0774521392

கொடிகாமம்–சாவகச்சேரி–கைதடி ஊடாக யாழ்ப்பாணம்
காலை 7.30 மணி
காலை 8.00 மணி
தொடர்பிற்கு – 0776186554

மாவிட்டபுரம்–சுன்னாகம்–மருதனார்மடம்–கொக்குவில் ஊடாக யாழ்ப்பாணம்
காலை 7.30 மணி
காலை 8.00 மணி
தொடர்பிற்கு – சரவணன் 0777243129

மூளாய்–சுழிபுரம்–சித்தன்கேணி–சங்கானை–மானிப்பாய்–யாழ்ப்பாணம்
காலை 7.30 மணி
தொடர்பிற்கு – சரவணன் 0777243129

கேவில்–ஆழியவளை–உடுத்துறை–வத்திராயன்–மருதங்கேணி குடியிருப்பு வீதிகள் ஊடாக புதுக்காடு–யாழ்ப்பாணம்
காலை 6.00 மணி
தொடர்பிற்கு – காண்டீபன் 0761660414

மருதங்கேணி சந்தி – செம்பியன்பற்று தெற்கு–செம்பியன்பற்று வடக்கு–மாமுனை வடக்கு–மாமுனை சந்தி–நாகர்கோவில் வடக்கு ஊடாக யாழ்ப்பாணம்
காலை 6.30 மணி
தொடர்பிற்கு – காண்டீபன் 0761660414

அம்பன் மருத்துவமனை–பொற்பதி–குடத்தனை வடக்கு–மணற்காடு–வல்லிபுரம்–யாழ்ப்பாணம்
காலை 7.00 மணி
தொடர்பிற்கு காண்டீபன் – 0761660414

**ஊடகப்பிரிவு**
**எழுக தமிழ்-2019**
**தமிழ் மக்கள் பேரவை**
**14.09.2019**

# எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவு கோரி வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி




வவுனியா, செப். 15

எழுக தமிழ் மக்கள் எழுச்சி போராட்டத்திற்காக மக்களை அணி திரட்டும் முகமாக விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற்று வவுனியா வடக்கில் முன்னெடுக்கப்பட்டது.

ஓமந்தை,கனகராயன்குளம்,புளியங்குளம் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளிலும் இந்தப் பிரசார நடவடிக்கை வவுனியா மாவட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியினரால் நேற்று முன் தினம் முற்பகல் 10மணியிலிருந்து மாலை 2.30மணி வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராசா, வவுனியா வடக்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அரசியல் கைதிகளின் உறவினர்கள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் ,தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


## விசேட பொது அறிவிப்பு



**திரு. ராஜ்சங்கர் பாலசிங்கம்**
**(இல. 23, மூர் வீதி, கொழும்பு 06.)**

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது யாதெனில் மேலுள்ள புகைப்படத்தில் உள்ள திரு.ராஜ்சங்கர் பாலசிங்கம் என்று அழைக்கப்படும் நபர் எமது நிறுவனமாகிய EAP BOROADCASTING COMPANY LIMITED நிர்வாகத்தின் சகல பொறுப்புகளிலும் கடந்த ஜுலை 02 .2019 இல் இருந்து உடனடியாக நீக்கப்படடுள்ளார்.

இனிவரும் நாட்களில் இவருடன் யாரும் எமது நிறுவனம் சம்பந்தமான எந்த விதமான தொடர்புகளை பேணினாலும் அதற்கு எமது நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பாகாது.

**EAP BROADCASTING COMPANY LIMITED**
No. 678, Galle Road, Colombo 03.

**BEN HOLDINGS (PVT) Limited**
No. 42, Dr. N. M Perera Mawatha, (Cotta Road), Colombo 08.

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்




## தமிழ் சிவில் சமூக அமையம் எழுக தமிழுக்குப் பேராதரவு

தமிழ் மக்கள் பேரவையால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும், 16 201செப்டம்பர் 2019 அன்று நடைபெறவிருக்கும் 'எழுக தமிழ்' பேரணிக்கு தமிழ் சிவில் சமூக அமையம் தனது ஆதரவை வழங்கு கின்றது.

இது குறித்து தமிழ் சிவில் சமூக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

எழுக தமிழ் பேரணி இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடக்கு முறைகள் தொடர்பில் எமது எதிர்ப்பை காட்டுவதற்கும் நீதிக்கான அவாவை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவும் ஒழுங்கு படுத்தப்பட் டுள்ளதாலும் அரசியலில் வெகுசன அணிதிரட்டலை சாதித்தியப்படுத்து வதன் முக்கியத்துவம் கருதியும் நாம் மனப்பூர்வமாக எமது ஆதரவை இம் முயற்சிக்கு அளிக்கின்றோம்.

தேர்தல் அரசியல் தொடர்பிலும் அதில் இயங்கும் தரப்புக்களின் செல்நெறி தொடர்பிலும் தமிழ் மக் கள் மிகவும் சோர்வடைந்து போய் உள்ளனர். மக்கள் பிரதிநித்துவ அரசியலை தாண்டிய ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயக்கத்தையும் நிகழ்ச்சித்திட்டத்தையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நோக்கங்களுக்காகவே தமிழ் சிவில் சமூக அமையம் பேரவையின் உருவாக்கத்தில் பங்கெடுத்தது. தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக பரிமாணிப்பதும் தேர்தல் அரசியல் கடந்து அரசியல் பணி ஆற்றுவதுமே அதனது வரலாற்று வகிபாகமாக இருக்க முடியும். அதற்கு பேரவை தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றும் அத்தகைய முயற்சிக்கு எமது முழு ஆத ரவுண்டு என்பதையும் ஆணித்தரமாக வெளிப்படுத்து கிறோம் – என்றுள்ளது. (ஐ)